# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய மாத இதழ்

மலர் - 15 செப்டம்பர் 2002 இதழ் - 9



வெளியிடுவோர்

கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு, இந்தியா

✆ 04257-30030, 30382. E-mail: kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தாமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை.ரூ.20/-

### தொடர்பு முகவரி

தமிழ் உலக ஆத்துமா ஆதாயத் திட்டம்
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

## ஆசானின் அறிவுரையிலே...

| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | ஐந்தாம் வேதாகம கருத்தரங்கம் | 10 |
| 3. | இந்தியர்களின் ஊழியம். | 11 |
| 4. | பெண்கள் பகுதி | 13 |
| 5. | சிறுவர் பகுதி | 17 |
| 6. | வாலிபர் பகுதி | 19 |
| 7. | மனிதன் தேர்ந்தெடுக்கும் உரிமை | 23 |
| 8. | லூக்கா ஒரு கண்ணோட்டம் | 25 |
| 9. | மனுஷர் மேல் விழுந்த கடமை | 26 |
| 10. | சபையில் பெண்கள் ..... | 31 |

# THIRUMARAI AASAAN

**Published by Chruch of Christ**

**Editor**
*S. RAJANAYAGAM*

**Honorary Editor**
*J.C. CHOATE*

**Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India.**

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol.15** **September - 2002** **Issue - 9**


ஆசிரியர் உரை

# தாவீது போல...

இப்பொழுதெல்லாம், ''தாவீது போல'' என்று ஆரம்பித்து விட்டாலே அநேகருக்கு நிலை கொள்வதில்லை. ஆம், தாவீது போலப் பாடி நடனமாடு வோம் என்று கூறி, வயது பேதமின்றி, ஆட்டம் போட ஆரம்பித்து விடுகின்றனர். இன்றைய கிறிஸ்தவம், அதல பாதாளத்தை நோக்கி போய்க் கொண்டிருக்கிறதென்பதற்கு இது ஓர் அப்பட்டமான சாட்சியாயிருக்கிறது. அறிவுப் பூர்வமான, இந்த உன்னத மார்க்கத்தை, உணர்வுப் பூர்வமான ஒன்றாக மாற்றியதோடு, திருப்தியடையாமல், அதை அநாகரீமானதானவும் மாற்றியே தீருவோம் என்று பலர் கங்கணம் கட்டி வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படியில்லாவிட்டால், ஆவிக்குரிய ரீதியில் இன்றைக்கு வாழும் நம்மை கட்டுப்படுத்தக் கூடிய புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்குச் சற்றும் சம்பந்தமில்லாத அநேக காரியங்களை இவ்வளவு துணிகரமாகச் செய்வார்களா?

தாவீது போல செய்ய வேண்டுமென்று ஒருவன் விரும்பினால், அவன் புதிய ஏற்பாட்டு உபதேசத்தை மீறாமலேயே செய்வதற்கு அநேக காரியங்கள் உண்டு. ஆனால், அவை எல்லாவற்றையும் குப்புறத் தள்ளிவிட்டு, கிறிஸ்துவின் உபதேசத்திற்கு ஊறு விளைவிக்கின்ற இச்செயலை உடும்புப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டுள்ளனர். இது பற்றி விபரமாக எழுதுவது, இங்கே என்னுடைய நோக்கமில்லையாகையால், நாம் நம்முடைய பாடத்திற்குச் செல்லுவோம்.

''ஒப்பாரும் மிக்காரும்'' என்ற அழகுமிகு தமிழ்ச் சொல்லை நீங்கள் எங்காவது கேட்டிருக்கிறீர்களா? அதிகம் கேட்டிருக்க வாய்ப்பில்லை. அப்படி கேட்டிருந் தாலும் அதன் பொருளை அவ்வளவு சீக்கிரம் புரிந்திருக்க முடியாது. அப்படிப் புரிந்து கொள்ள முடியாததற்குக் காரணம், மொழி அறிவு குறைவு என்பதை விட, இவ்வார்த்தையின் பயன்பாடு மிகக் குறைவு என்பதே மிகவும் சரியானதாயிருக்கும். இவ்வார்த்தையை அதன் உள்ளான பொருளோடு பயன்படுத்தக் கூடிய சரியான சந்தர்ப்பங்கள் எப்போதோ ஒரு முறை தான் வரும் அல்லது நிகழும்.

இதன்பொருளைக் கொஞ்சம் சுலபமாகப் புரிந்து கொள்வதற்கு இப்பொழுது முயற்சிப்போம். ''ஒப்பாரும் மிக்காரும்'' என்ற இனிய வார்த்தைக்கு இணையானது என்று சொல்ல முடியாவிட்டாலும், அதற்கு மிக நெருக்க மானது என்று சொல்லக் கூடியதும், நமக்கு ஓரளவுக்காகிலும் பழக்கமானது மான வார்த்தை ''ஈடு இணையில்லை'' என்பது. இதுவும் உயர்ந்த பொருளைத் தரும் ஓர் அசாதாரண வார்த்தை தான். ஒரு செயலும், சாதனையும் உச்சத்திற்குப் போகும்போதும், ஒன்றின் மதிப்பும், மேன்மையும் அளவுக்கதிகமாகும்போதும், ஒரு நிகழ்ச்சியும், அதன் தாக்கமும் எல்லை தாண்டும் போதும், ''ஈடு இணையில்லை'' என்ற வார்த்தை பயன்படுத்த படும். சிறப்புக்குரிய இவ்வார்த்தையை, அநேகர் இன்று சம்பந்தமில்லாததற் கெல்லாம் பயன்படுத் துகின்றனர். ஆனால், இவ்வார்த்தைக் குரிய உண்மைப் பொருளோடு, இதை ஒரு நபருக்கோ அல்லது ஒரு பொருளுக்கோ அல்லது ஒரு நிகழ்வுக்கோ சம்பந்தப்படுத்திவிட்டால் , அதன் பிறகு அந்த நபரோடோ அல்லது அந்தப் பொருளோடோ அல்லது குறிப்பிட்ட நிகழ்வோடோ வேறு எதையும் சமப்படுத்தக் கூடாது. அது தான், '' ஈடு இணையில்லை'' என்பதன் பொருள். இது போன்று பொருள் தரக்கூடிய , ஆனால் இதைக்காட்டிலும் இன்னும் மேலான வார்த்தை தான் ''ஒப்பாரும் மிக்காரும்'' என்பது.

இவ்வளவு ஆழமான வார்த்தைக்கும், தாவீதுக்கும் என்ன சம்பந்த மிருக்கிறது என்று நீங்கள் கேட்டு முகம் சுளிப்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. ஒப்புமையற்றதொரு வாழ்க்கையை அவன் எங்கே வாழ்ந்தான் என்று நீங்கள் கேள்வியெழுப்புவதும் கேட்கிறது. ஈசாயின் குமாரனாகிய தாவீதை, என் இருதயத்துக்கேற்றவனாகக் கண்டேன் என்று வாக்குப் பகர்ந்த தேவனுடைய வார்த்தையைப் பொய்யாக்கினவானாயிற்றே என்று நீங்கள் புலம்புவதும் புரிகிறது. புகழ்மிக்க பத்துக் கட்டளைகளில், மூன்று கட்டளைகளைப் பகிரங்கமாக மீறினவனாச்சே அவன் என்ற உங்கள் அங்கலாய்ப்பையும் அறிய முடிகிறது. ஏத்தியனாகிய உரியாவின் மனைவி பத்சேபாள் காரியத்தில், அவன் பாவியான விதம், சீர்கெட்ட காலத்தில் வாழ்கின்ற நமக்கே சீரணிப்பதற்குச் சிரமமாயிருக்கிறதென்பது எனக்கும் விளங்காமலில்லை. ஆயினும், ஆம் ஆயினும், ஒரு காரியத்தில் இந்த தாவீது ''ஒப்பாரும் மிக்காருமானவனாக'' இருக்கிறான் என்பதை நான் இங்கே அடித்துச் சொல்ல விரும்புகிறேன்.

ஆம், சங்கீதம் 51-ஐ நீங்கள் படித்துப் பாருங்கள். அதன் உள்ளே புகுந்து தியானித்துப் பாருங்கள். தாவீது வடித்துள்ள வார்த்தைகளைப் பிரித்து, அலசிப் பாருங்கள். அப்பொழுது, அவன் புறத்திலே செய்த காரியங்களுக்காக, அகத்திலே எப்படி அல்லல்பட்டான் என்பது ஐயத்திற்கு இடமின்றித் தெரியும். அச்சங்கீதத்தின் ஒவ்வொரு வரியும் அவன் உள்ளக்கிடக்கைகளை அம்பலப் படுத்துவதாக உள்ளது. பத்சேபாளிடம் பண்ணின பாவத்திற்காக அவன் பட்ட பாடுகளும், அவன் அடைந்த வேதனையும் அங்கே எரிமலையாய் வெடித்திருக்கிறது. அவன் வார்த்தைகள், அவன் ஈடு இணையற்றவன் என்பதையும், அவன் அடைந்த துக்கமும், அதனடிப்படையில் பெற்றுக் கொண்ட மனமாற்றமும், அவன் ஒப்பாருமிக்காருமற்றவன் என்பதையும் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது. ஆம், தன்னால் செய்யப்பட்ட பாவத்திற் காகத் தன்னை இந்தளவு வருத்திக் கொண்ட மனிதன் வேதாகமமெங்கிலும் இல்லவே இல்லை.

பாவம் செய்யாத மனிதன் இல்லையென்பது உண்மை. ஆனால், அந்தப் பாவத்திற்காக, இந்தளவு மனம் வருந்தின மனிதனும் ஒருவனு மில்லையென்பது உண்மையிலும் உண்மை. இவ்வகையில் தான், தாவீது ஒப்பாருமிக்காருமற்றவன். ஆகவேதான், தாவீதின் மனந்திரும்புதல், ஈடு இணையற்ற மனந்திரும்புதல். இவ்விரண்டு வார்த்தைகளும் தாவீதுக்கு இப்போது ஒத்துப் போகிறது தானே!

இந்த தாவீதை நாம் பழைய ஏற்பாட்டின் " கெட்ட குமாரன்" என்றும் சொல்லலாம். அவன் போலவே, இவனும் தன் தகப்பனுக்கு விரோதமாகச் செய்ததை உணர்ந்து, அதற்காக என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்தான். பத்சேபாளிடத்தில் பாவத்திற்குட்பட்டு, நாத்தானால் குற்றவாளி யாகத் தீர்க்கப்பட்ட தாவீது, தன் ஆன்மாவில் பட்ட வேதனை, கெத்சமனே தோட்டத்தில் இயேசுவானவர், பட்ட வேதனையோடு (லூக்கா. 22:44) கிட்டத்தட்ட ஒப்பிடலாம் என்று ஒரு வேத பண்டிதர் கூறுகிறார். அவர் சொல்வதில், பெரிய முரண்பாடு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதன் வார்த்தைகள் அப்படித்தான் இருக்கிறது. அவன்பட்ட வேதனை அவனைப் படுத்த படுக்கையாக்கியிருக்கலாம் என்றும் (வச.8) அவன் மரணத்திற்குச் சமீபமாய்ப் போயிருப்பான் என்றும் கூட (வச.14) சிலர் வாதிடுகிறார்கள். எது எப்படியோ, மனமாற்ற விஷயத்தில், அவன் தனித்தே நிற்கிறான். ஒப்பாருமிக்காருமற்றவனாகவே தாவீது திகழ்கிறான்.

இந்த மனமாற்ற சங்கீதத்திலிருந்து, நாம் நமது ஆன்மீக வாழ்க்கைக்குப் பயனுள்ளதாக எதைக் கற்றுக்கொள்ள முடியுமென்று இங்கே பார்ப்போம்.

## I. தாவீது பாவத்தை ஒத்துக்கொண்டான் (வசனம். 3)

சீர்மிகு சங்கீதமாகிய, சங்கீதம் ஐம்பத்தி ஒன்றிலிருந்து நாம் கற்றுக்கொள்கின்ற முதல்பாடம், தாவீது தன் பாவத்தை எவ்வித தயக்கமும், மறுப்பும் இல்லாமல் ஒத்துக்கொண்டான் என்பது.

ஆம், நாத்தான் தீர்க்கதரிசி, ஓர் உதாரணத்தின் மூலம் தாவீதின் பாவத்தை அவனுக்கு எடுத்துச் சொல்லி, ''நீயே அந்த மனுஷன்'' (II.நாளா.12:7) என்று நேருக்கு நேர் இடித்துச் சொன்னபோது, தன் தலையை தொங்கப்போட்டுக் கொண்ட தாவீது, '' நான் கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்தேன்'' (II.சாமு.12:13) என்றான். செய்த பாவத்தை ஒத்துக் கொள்வது என்னபெரிய காரியமா என்று நீங்கள் கேட்கக் கூடும்? ஆம், அது மிகப்பெரிய காரியம் மட்டுமல்ல, அது மிகவும் சிரமமானதும் கூட.

நம்முடைய ஆதிப் பெற்றோராகிய ஆதாமும், ஏவாளும் என்ன செய்தார்கள்? தங்களுடைய பாவத்தை ஒத்துக்கொண்டார்களா? உலகத்தின் முதல் பாவத்திற்கு முழுக்காரணமாயிருந்த ஏவாள் என்ன சொன்னாள்? ''சர்ப்பம் என்னை வஞ்சித்தது. நான் புசித்தேன் என்றாள்'' (ஆதி. 3:13) அங்கே, பழியைத் தூக்கி, சர்ப்பத்தின் மீது போட்டாள். அன்றைக்கே பெண்டாட்டி தாசனாகி, உலகத்தின் சீரழிவுக்கு தன் பங்கைக் குறைவில் லாமல் செய்த, ஆதாம் என்ன சொன்னான்? '' என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன்'' என்று சொல்லி பழியை தேவன் மீதே போட முயற்சித்தான். (ஆதி.3:12) தேவனால், தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்கள், அந்த தேவனுக்கு விரோதமாய் சேவிப்பதற்கு பொன் கன்றுக்குட்டியை உண்டுபண்ணின ஆரோனிடம், ஏன்இப்படி செய்தாய் என்று மோசே கேட்டபோது ஆரோன் தன் குற்றத்தை ஒத்துக்கொண்டானா? இல்லைதானே! (யாத். 32:21-24) ஏதேன் தோட்டத்தில் ஆரம்பித்து, கிட்டதட்ட இன்று வரை, இதுதானே நடந்து கொண்டிருக்கிறது?!

ஆனால் தாவீதோ, தன் குற்றத்தை மனப்பூர்வமாக ஒத்துக் கொண்டான். ஆதாம், ஏவாளைப் போன்று தன் குற்றத்தை மற்றவர்கள் மீது தூக்கிப் போடவுமில்லை, ஆரோனைப் போல, சரியான சாக்குச் சொல்லவுமில்லை. தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாய் எண்ணின பரிசேயர்களுக்காகச் சொல்லப்பட்ட உவமையில் காண்கிறபடி, தன் நற்கிரியைகளைப் பட்டியலிட்டுக் காட்டி, அதற்குள்ளாகப் போய் ஒளிந்து கொள்ளவும் அவன் முயற்சிக்கவில்லை. (லூக்கா.18: 9-12) ஒரேவரிதான், அது, '' நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தேன்'' என்பது. ''தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்'' அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்'' என்ற வேதவாக்கு அது எழுதப்படுவதற்கு முன்னமே அவனுக்கு தெரிந்திருக்கிறது. (நீதி.28:13)

சரி, நம்முடைய பாவங்களை ஒத்துக்கொள்கின்ற காரியத்தில் நாம் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறோம்? நம்முடைய ஆன்மாவை தற்பரிசோதனை செய்து பார்ப்போம். எத்தனையோ விதவிதமான பாவங்களை நம்முடைய வாழ்க்கையில் செய்திருப்போம் அல்லது செய்து கொண்டிருப்போம். அப்படிப்பட்ட பாவங்களில் அநேகம், மற்றவர்களால் நமக்கு சுட்டிக்காட்டப் பட்டிருக்கும். அச்சமயங்களிலெல்லாம் நாம் என்ன செய்தோம்? எப்படிப்பட்ட பதில் தந்தோம்? ஒரு வேளை நாம் மறுப்பும், மாறுத்தரமும் சொல்லியிருந்தாலும், நாம் பாவம் செய்தோமா இல்லையா என்பது நமக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். ஆகவே, நம்முடைய பதில் எப்படிப்பட்டதாயிருந்தது அல்லது எப்படிப்பட்டதாயிருக்கிறது? எண்ணிப்பார்ப்போம்.

தேவனிடத்திலிருந்து, இரக்கத்தையும் நம்முடைய பாவங்களுக்கான மன்னிப்பையும் பெற்றுக் கொள்வதற்கு நாம் செய்ய வேண்டிய முதல் காரியம், நம்முடைய பாவங்களை ஒத்துக்கொள்வதாகும். இயேசுவின் அவ்வுமையில், ஆயக்காரன், ''தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு, தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். இவன் தான், நீதிமானாக்கப்பட்டவனாய் தன் வீட்டுக்குத் திரும்பி போனான்'' (லூக்கா 18:13,14) என்பது நினைவில் இருக்கட்டும்.

நாமும், நம்முடைய வாழ்க்கையில், தேவனுக்கு விரோதமாக நாம் செய்த, செய்கின்ற காரியங்களை மனப்பூர்வமாக ஒத்துக்கொண்டு, உண்மையான மனமாற்றத்திற்கு அடித்தளமிடுவோம்.

## II. தாவீது, பாவத்திற்காக மனம் வருந்தினான் (வச.6- 8)

சிறப்பான அச்சங்கீதத்திலிருந்து, நம்மால் கற்க முடிகின்ற அடுத்த பாடம், தன் பாவங்களை மறுப்பும், எதிர்ப்பும் இல்லாமல் ஒத்துக் கொண்ட தாவீது, அவைகளுக்காக மனம் வருந்தினான் என்பது.

தன் பாவங்களுக்கான காரணத்தை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பும் அல்லது தன் பாவங்களைக் சுட்டிக்காட்டின மனிதனை தண்டிப் பதற்கான அதிகாரமும் பெற்றிருந்த தாவீது, அப்படி எதுவும் செய்யாமல், அவைகளை ஒப்புக் கொண்டதோடு, அய்யோ, இப்படிச் செய்து விட்டேனே என்று புலம்போ புலம்பு என்று புலம்பியிருக்கிறான். இவ்வளவு கடுமையான பாவங்களைச் செய்த தாவீது, எப்படி தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற தாசனாக இருக்க முடியும் என்ற நம்முடைய கேள்விக்கு இந்த இடம் தான் சரியான பதிலைக் கொடுக்கிறது. அவனுடைய மனதும், இருதயமும் எப்படி அங்கலாய்த்ததென்பதற்கு இச்சங்கீதம் பலமாகச் சான்று பகர்கிறது. உண்மையான மனமாற்றத்திற்கான இருதயம் எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும் என்பதற்கு இங்கே தனி இலக்கணமே வகுத்துள்ளான். அவன் வருத்தத்தின் வார்த்தைகளைப் பாருங்கள். '' இதோ, உள்ளத்தில் உண்மையா

யிருக்க விரும்புகிறீர்; அந்தக் கரணத்தில் ஞானத்தை எனக்கு த் தெரியப் படுத்துவீர். நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன். நான் சந்தோஷமும், மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும், அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூரும்"(சங். 51 : 6-8) என்றான்.

தாவீதின் மன வியாகுலத்தைக் கண்ட தேவன்,இவன் மனமாற்றத்தை அங்கீகரித்தார். ஒருவேளை, செய்த பாவத்திற்கான விளைவைச் சந்திக்க வேண்டியிருந்தாலும், அதற்கான விலையை கொடுக்க வேண்டியிருந்தாலும், குற்ற உணர்விலிருந்து விடுபடவும், தேவனோடு தன்னுடைய உறவைச் சீர் செய்யவும் இதுதான் வழி செய்தது. அப்போஸ்தலன் பவுல், கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் இதையொத்த கருத்தைத்தான் எடுத்துரைக் கிறார்."... நீங்கள் துக்கப்பட்டதற்காக அல்ல, மனந்திரும்புகிறதற் கேதுவாக துக்கப்பட்டதற்காகவே சந்தோஷப்படுகிறேன்:.. தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல், இரட்சிப்புக்கேதுவான மனந்திரும் புதலை உண்டாக்குகிறது. லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக் குகிறது" (II. கொரி.7:9,10) என்று.

தேவனுக்கேற்ற துக்கம் மனந்திரும்புதலை ஏற்படுத்துகிறதென்று பார்க்கிறோம். அப்படியானால், தேவனுக்கேற்ற துக்கம் என்பது என்ன? தேவன், பாவத்தை எந்த கண்ணோட்டத்தோடு பார்த்து துக்கமடைகிறாரோ, அதே கண்ணோட்டத்தோடு நம்முடைய பாவங்களைப் பார்த்து, அதற்காக வருந்துவதே தேவனுக்கேற்ற துக்கம். அங்கே தாவீது அடைந்தது அப்படிப்பட்ட துக்கம் தான். அந்த துக்கம் தான் அவனை உண்மையான, தேவன் அங்கீகரித்த மனமாற்றத்திற்கு வழிநடத்தினது. மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளையும் கொடுக்கும்படி செய்தது. மாற்கு நற்செய்தி நூலில் ஏரோது ராஜாவும், " தான் மதியீனமாக இட்ட ஆணையினிமித்தம், யோவான் ஸ்நானகனின் தலை எடுக்கப்படவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டதே என்று "மிகவும் துக்கம டைந்தான்" (மாற்கு 6:26) ஆனால், அந்த துக்கம் அவனை மனமாற்றத்திற்கு வழிநடத்தவில்லை. ஆவியானவரின் கூற்றுப்படி இப்படிப்பட்ட துக்கம், மரணத்தை உண்டாக்குகிற துக்கமாயிருக்கிறது.

அருமையானவர்களே, இன்றைக்கு ஒருவன் தாவீதுபோல மனமாற்றம் அடைய வேண்டுமானால், அவன் தாவீது அடைந்த துக்கம் போல், தன்னுடைய பாவங்களுக்காக மனம் வருந்த வேண்டும். இப்படிப்பட்ட மனவருந்துதலும், அதன் மூலம் ஏற்படுகின்ற மனமாற்றமும் தான், உண்மையான இரட்சிப்புக்கு ஒருவனை வழிநடத்தும்.

இரட்சிக்கப்பட்டுவிட்டோம் என்று சொல்லிக்கொள்கின்ற மிகப்பெரும்பா லோரிடத்தில் அதற்கேற்ற கிரியையும், மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளும் இல்லாமலிருப்பதற்கான கண்டிப்பான காரணம், தாவீது போல தேவனுக்கு விரோதமாகச் செய்த பாவங்களுக்காக வருந்த வேண்டிய அளவுக்கு வருந்தாமல்,

துக்கப்படாமல், ஏதோ சொல்கிறார்கள் என்பதற்காகவும்; சரிஇருக்கட்டுமே என்பதற்காகவும், சபை கட்டுக்கோப்புக்காகவும், குடும்பத்தின் கட்டாயத்திற்குகாகவும், ஒருவேளை இதன் மூலம் பரலோகம் போய்விடலாம் என்ற நப்பாசையிலும் பெற்றுக்கொள்கின்ற ஞானஸ்நானங்களே. இப்படிப்பட்ட ஞானஸ்நானங்களில் பாவங்கள் கழுவப்பட்டிருக்காது. பாவங்கள் முற்றிலும் கழுவப்படாத நிலையில், புதிய மனுஷனாக மாறியிருக்க முடியாது. புதிய மனுஷனாக மாறாதவனிடத்தில் மனந்திரும்புதலுக்கேற்ற கனிகள் எப்படி இருக்கும்? எங்கிருந்து வரும்?

இதை வாசிக்கும் நாம் ஒவ்வொருவரும், நம்முடைய பாவங்களுக்காக, தாவீது போல, தேவனுக்கேற்ற துக்கமடைந்து உண்மையான மனமாற்றத்தையும் அதனடிப்படையில் மெய்யான இரட்சிப்பையும் பெற்றுக்கொண்டு, கர்த்தராலே, அவருடைய ஒன்றான மெய்ச் சபைக்குள்ளாக சேர்க்கப்படுவோம்.

## III. தாவீது, அவர் சித்தம் செய்ய ஒப்புக்கொடுத்தான் (வச.12-15)

பெயர் பெற்ற சங்கீதம் 51- லிருந்து, நம்மால் கற்க முடிகின்ற இன்னுமொரு பாடம், மனம் மாறின தாவீது, அதற்கான கனிகளைத் தரவும் , அதற்கேற்ற கிரியைகளை நடப்பிக்கவும் தன்னை ஒப்புக் கொடுத்தான் என்பது.

இப்பொழுதெல்லாம், நற்செய்தியைக் கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் எடுக்க முன்வருபவர்களிடத்தில், தாங்கள் செய்ய விரும்புகிற காரியத்தைக் குறித்த தெளிவும், இனி நான் என்ன செய்ய வேண்டும், எப்படியிருக்கவேண்டும் என்ற தீர்மானமும் இருப்பதில்லை. ஏதோ, ஒப்புக்குச் செய்கின்ற ஒரு காரியத்தைப் போலத்தான், ஆவிக்குரிய ரீதியில் அதி முக்கியமாயிருக்கிற இக்காரியத்தையும் செய்ய விரும்புகிறார்கள். ஆனால் தாவீதைக் கவனித்தால், தேவனுக்கு விரோதமான தன்னுடைய பாவங்களை மனப்பூர்வமாக ஒத்துக்கொண்டு, அதற்காக நெஞ்சு நோக வருந்தி, அங்கே தானே தீர்மானமும் செய்கிறான். அவன் வாயின் வார்த்தைகளைக் கவனியுங்கள். "உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத்தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும். அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள். தேவனே, என்னை இரட்சிக்குங் தேவனே, இரத்தப் பழிகளுக்கு என்னை நீங்கலாக்கி விடும்; அப்பொழுது என் நாவும் உம்முடைய நீதியைக் கெம்பீரமாய்ப் பாடும். ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்; அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்." (சங்.51: 12-15).

மனந்திரும்பும் ஒவ்வொருவரும் தேவனுக்கென்று கனிகொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெற வருகிறவர்களைப் பார்த்து, மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள் என்று

யோவான் ஸ்நானகன் கேட்டான் (மத்.3:8; லூக்.3:8) மேலும், அப்போஸ்தலனாகிய பவுல், அகிரிப்பா ராஜாவுக்கு உத்தரவு சொல்லும்போது, "முன்பு தமஸ்குவிலும் எருசலேமிலும், யூதேயா தேசமெங்குமுள்ளவர்களிடத்திலும்,பின்பு, புறஜாதியாரிடத்திலும் நான்போய், அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும், மனந்திரும்பதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டுமென்று அறிவித்தேன். (அப்.26;20) என்கிறான். இதிலிருந்து மனந்திரும்புதலுக்கேற்ற கனியும், கிரியையும் எவ்வளவு அவசியம் என்று பாருங்கள்.

தன்னுடைய மனமாற்றத்திற்கான கெஞ்சலில், தாவீது குறைந்தது மூன்று காரியங்களை, இனிமேல் நான் செய்வேன் என்று கூறுகிறான். (1) பாதகருக்கு உமது வழிகளை அறிவிப்பேன்.(2) பாவிகளை உம்மிடத்திற்கு கொண்டு வருவேன்.(3) உம்முடைய நீதியை கெம்பீரமாய்ப் பாடி, உமது புகழை என் வாயினால் அறிவிப்பேன். இதை வாசித்துக் கொண்டிருக்கும் அருமையான நண்பரே, சகோதரரே!உங்களைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்கிறேன். நான் மனந்திரும்பி விட்டேன் என்றும்,நான் இரட்சிக்கப்பட்டுவிட்டேன் என்றும் சொல்லுகிற நீங்கள் ஒவ்வொருவரும், தாவீது செய்வேன் என்று சொன்ன இம்மூன்று காரியங்களையும் உங்களுடைய வாழ்வில் செய்துகொண்டுள்ளீர்களா?

ஒப்பாரும்மிக்காருமற்ற தாவீதின் மனந்திரும்புதல் தேவன் ஏற்றுக்கொண்ட உண்மையான மனந்திரும்புதல். தன் வாழ்வில் உண்மையான மனமாற்றத்தைக் காட்ட விரும்பிய தாவீது. குறைந்தது மூன்று காரியங்களை செய்யும்படியாகத் தீர்மானித்து அதற்காக தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்தான். அம்மூன்று காரியங்களும் உண்மையான மனமாற்றத்திற்கான அடையாளங்களாக அங்கே இருந்தது. இன்றைக்கு மனம் மாறிவிட்டேன் என்றும், இரட்சிக்கப்பட்டு விட்டோம் என்று சொல்லுகிறவர்களிடத்தில் இம்மூன்று காரியங்களும் இருக்கிறதா என்று சோதித்து பார்ப்போம். ஒருவேளை நம்முடைய வாழ்வில் இவைகள் இல்லையென்று சொன்னால், நம்முடைய மனந்திரும்புதலும், இரட்சிப்பும் உண்மையானதாக இருக்கமுடியுமா? சொல்லுங்கள்.

பாதகருக்குப் பரமனின் வழியை அறிவிப்பதும், பாவிகளை இரட்சகர் இடத்தில் திருப்புவதும் பாதிரியின் வேலையென்றும், பாஸ்டரின் பணி என்றும், பிரபல பிரசங்கிகளின் ஏகபோக உரிமையென்றும், ஊழியரின் கடமையென்றும் எண்ணிக்கொண்டிருக்கிறார்களா? அப்படி நீங்கள் எண்ணினால் அது மிகப்பெருந் தவறு. இவர்களைவரும் இந்த வேலையை உண்மையாய்ச் செய்கிறார்களென்று சொல்லமுடியாது. கர்த்தருக்கு ஊழியம் செய்ய பிரத்யேகமாக ஆசாரியர்கள் இருந்த பழைய ஏற்பாட்டின் நாட்களின் தான், தாவீது இம்மூன்று காரியங்களையும் செய்வேன் என்று தீர்மானித்துள்ளான். புதிய ஏற்பாட்டின் காலத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவனும்

ஆசாரியனே. (Iபேதுரு. 3:9) ஆகையால், ஒவ்வொருவருக்கும், கிறிஸ்துவுக்கும், அவருடைய சபைக்கும் ஊழியம் செய்யும் கடமையிருக் கிறது. தேவனுக்கென்று ஊழியம் செய்வதற்குப் பிரத்யேகமாக ஆசாரியர்கள் இருந்த அந்த நாட்களிலேயே, தேவனுக்கு தங்களை ஒப்புக்கொடுப்பவர்கள், அவருக்கு ஊழியம் செய்வது அவசியமானால், கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஆசாரியர்கள் என்று சொல்லப்படும் இந்நாட்களில், அது எவ்வளவு அவசியம் என்று பாருங்கள்.

ஆகவே, தேவனுடைய வார்த்தைகளை அதன் ஆழத்தோடும், ஆத்தும பாரத்தோடும், கலப்படமற்ற சுவிசேஷத்தோடும் போதிக்கும் தேவ ஊழியர்களுக்குத் தோள்கொடுத்து , நீங்களும் இம்மூன்று காரியங்களையும் நடப்பியுங்கள். உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை அறிவியுங்கள். (மத்.28 : 18-20) என்ற இயேசு பெருமானின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு இதுதான் இன்றைய அவசரத் தேவை.

ஆகையால், எனக்கன்பானவர்களே, மனந்திரும்பிட்டோம், இரட்சிக்கப்பட்டு விட்டோம் என்று சொல்லுகிற நாம், நம்முடைய மனமாற்றத்தை தாவீதோடு ஒப்பிட்டு பார்த்து, தாவீது போன்ற கிரியைகளை நம்முடைய வாழ்வில் நடப்பிக்கிறோமோ என்று எண்ணிப் பார்ப்போமாக. ஒருவேளை இன்னும் மனந்திரும்பி, இரட்சிக்கப்படாதவர்களாயிருந்தால், தாவீதுபோல, தேவனுக்கு விரோதமான நம்முடைய பாவங்களை ஒத்துக்கொண்டு, அதற்காக வருந்தி, புதிய ஏற்பாட்டு உபதேசத்தின் அடிப்படையில் மனந்திரும்பி, பாவ மன்னிப்பைபெற்று இரட்சிப்படைவோமாக! தேவையில்லாத காரியங்களுக்கு தாவீதை இழுத்து, தேவ வசனத்தை மீறுவதைக் காட்டிலும், மிகத் தேவையான இக்காரியத்தில், தாவீதின் வழிநடந்து, தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்து இருக்கும் இடத்தை சுதந்தரித்துக் கொள்வோமாக! ஆமென்!!

செ. இராஜநாயகம்.

## எல்லாவற்றிற்கும் முடிவு உண்டு!

இந்த பூமியானது அழிந்து போகக்கூடியது என்று வேதாகமம் மூன்று இடங்களில் சொல்கிறது. (ஏசாய.51: 6 சங்.102: 26; எபி. 1:11) அதைத்தான் தெர்மோடைனமிக்ஸ்-ன் இரண்டாம் விதி கூறுகிறது. இந்த விதி எல்லாமே ஒரு காலத்தில் முடிவுக்கு வரக்கூடியது எனக் கூறுகிறது. சக்தியானது குறைந்து கொண்டே போகும். அப்படி தொடர்ந்து குறைந்து போகும்போது, உலகமானது முடியும். உபயோகத்திற்கு ''சக்தி'' இல்லையென்ற ஒரு நிலை வரும். இது எப்படி வேதாகம எழுத்தாளர்களுக்குத் தெரியும்?

ஜெபியுங்கள்! திட்டமிடுங்கள்! பங்குபெறுங்கள்!

# காங்கேயம் கிறிஸ்துவின் சபையாரும் உலக வீடியோ வேதாகமக் கல்லூரியும்

இணைந்து நடத்தும்

# *ஐந்தாம் வேதாகம கருத்தரங்கம்*

## (FIFTH ANNUAL BIBLE LECTURESHIP)

நாள் : அக்டோபர் 14,15 - 2002
திங்கள், செவ்வாய் (அரசு விடுமுறை நாட்கள்)

நேரம் : தினமும் காலை 9.00 - 12.30 மணி வரை
மாலை 2.00 - 5.00 மணி வரை

இடம் : கிறிஸ்துவின் சபை வளாகம்
தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.

பேச்சாளர்கள் : தேர்ந்தெடுக்கப்பட்ட தேவதாசர்கள்

வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் உட்பட

*பதிவுக் கட்டணம் ரூ. 25/ - மட்டுமே*

தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடவசதி உண்டு.

***இவ்வருடம் மிகக் கூடுதல் வசதி செய்யப்பட்டுள்ளது.***

தொடர்பு முகவரி

கிறிஸ்துவின் சபை
288, தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.
போன் : 04257 - 30030, 30382
செல் : 98427 - 30382

# இந்தியர்களின் ஊழியம்

சீனாவுக்கு அடுத்த படியாக இந்தியா ஒரு பில்லியன் மக்களுக்கும் மேலான ஜனத்தொகையைக் கொண்டதாக இருக்கிறது. இன்னும் சில காலத்தில் இந்தியா, சீனாவை ஜனத்தொகையில் முந்திவிடும் எனக் கணக்கிடப்படுகிறது. இந்தியா, சீனாவின் எல்லைக்குள் வாழும் இந்த திரளான ஜனங்களை மட்டுமல்ல, மற்ற இடங்களில் வாழும் இவ்விருநாட்டாரையும் சேர்த்து நினைத்துப்பாருங்கள் - உலக ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு இவர்களாக இருப்பார்கள் என்பது நிச்சயம்.

இன்னும் சற்று ஆழமாக சிந்தியுங்கள். இவர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இரட்சிக்கப்பட வேண்டிய விலையேறப்பெற்ற ஆத்துமா இருக்கிறது. அப்படி இருக்கிறபடியால், அவர்களுக்கும், உலகமெங்கும் சுவிசேஷத்தை எடுத்து செல்லும் மிகப்பெரிய பொறுப்பு கர்த்தருடைய ஜனமாகிய நமக்கிருக்கிறது. இதை நடைமுறையில் நாம் சிந்தித்து பார்க்கும்போது, இந்தியாவை மட்டும் நினைத்தாலே, இவ்வேலையை நம்மால் செய்ய முடியமா என்ற அச்சமும், நம்முடைய திராணிக்கு இது மிஞ்சியது என்ற நினைப்பு வந்து சேர்ந்து விடும், ஆனால், நாம் இந்த சவாலை உறுதியாக எதிர்கொள்ளும்போது, தேவன் நம்மோடு துணையிருப்பதால், இதை நிச்சயம் நம்மால் செய்து முடிக்க முடியும்.

இப்பிரச்சினைக்கு தீர்வாக, வேறு நாட்டுக் கிறிஸ்தவர்கள் வந்து இந்த வேலைகளை செய்வது இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக இருக்கலாம். ஆனால், இத்தனை திரளான மக்களுக்கு சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல, வரக்கூடிய, வரப்போகிற வெளி நாட்டவர்கள் போதுமானவர்களாக இருக்கப்போவதில்லை. எத்தனைபேர் வந்தாலும் சரி, அவர்களாகவே இப்பெரும்பணியை ஒருபோதும் செய்ய முடியாது. ஆகவே, இவைகளை வைத்துப்பார்க்கையில் ஆக்கபூர்வமான முடிவு யாதெனில், இந்தியர்கள் சுவிசேஷத்தை அறிய வேண்டுமென்றால், இந்திய கிறிஸ்தவர்கள் தான் தங்கள் சொந்த ஜனங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடியவர்களாக இருக்க வேண்டும். வெளிநாட்டவர்களும் வரலாம், வர வேண்டும், வந்துசில உதவிகளைச் செய்யவேண்டும், ஆனால் இங்கு இருக்கிற வர்களுக்குத் தான் அதில் பெரும்பங்கு உண்டு, ஆகவே அவர்கள்தான் இதில் முனைப்புக் காட்ட வேண்டும்.

உடனே சிலர், இந்தியாவில், இந்தியர்களே ஊழியம் செய்தால் எழும் பாதகமான சூழ்நிலைகளைப் பட்டியலிடலாம், ஆனால் நாம் ஊழியத்தை உண்மையாகவே செய்ய விருப்பம் உள்ளவர்களாக இருப்போம் என்றால் பாத கமானவைகள், நம்மை தடைசெய்யப் போதுமானவைகள் அல்ல. இப்பணியை செய்வதற்கு திராளவர்களோ, அல்லது கோடிகோடியாய் பணமோ தேவை யில்லை. மருத்துவமனைகள், பள்ளிகள், பெரிய கட்டடங்கள் அல்லது பொருளாதார வசதிகள் என்று எதுவும் உதவியாக இருக்க வேண்டியதில்லை. நமக்கு இருக்க வேண்டியதெல்லாம், தேவ அன்பும்,ஆத்தும பாரமும், ஊழியத்திற்குச் செல்லவேண்டுமென்ற வாஞ்சையும், இழந்துப் போனவர்க ளுக்கு சுவிசேஷத்தை எடுத்துச்செல்ல வேண்டுமென்ற வைராக்கியமும்தான்.

இவைகள் தான் நம்மை அனல்மூட்டி எழுப்ப வேண்டும். உபத்திரவமும், மற்ற பாதகமானவைகளும், கர்த்தருடைய பணியை என்றும் பரவும்படியே உதவியாக இருக்கமுடியும்.

**யாரிடமிருந்து இப்பணியை ஆரம்பிப்பது?**

நம்மிடமிருந்தே நாம் ஆரம்பிக்க வேண்டும். ஆம், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தான் கர்த்தருடையவன் என்றும், கர்த்தர் தன்னை உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷம் உரைக்கும்படி கட்டளையிட்டிருக்கிறார் என்றும் உணர்ந்து, அதனடிப்படையில் முடிவுகள் எடுக்கவேண்டும். (மாற்கு 16:15)

**எங்கிருந்து இப்பணியைத் தொடங்குவது?**

நாம் எங்கிருக்கிறோமோ அங்கிருந்து இதை நாம் தொடங்க வேண்டும். நம்முடைய குடும்பத்தார், நண்பர்கள், நம்மோடு பள்ளிக்கு வருபவர்கள், நம்முடன்பணி செய்கிறவர்கள், இவர்களிடமிருந்து நாம் ஆரம்பிக்க வேண்டும். நம்மை சுற்றியிருப்பவர்களுக்கு சுவிசேஷத்தை சொல்வது மிக அவசியமான காரியம்.

**எப்போது இப்பணியை ஆரம்பிக்க வேண்டும்?**

இப்பொழுதே! நாம் வீணடிப்பதற்கு ஒரு நிமிடம் கூட இல்லை, ஏனெனில், நாம் இப்பொழுது ஆரம்பித்திருப்பதே மிகத் தாமதமானது. ஆத்துமாக்கள் தேவன் அற்றவர்களாகவும், நம்பிக்கையில்லாதவர்களாகவும் ஒவ்வொரு நிமிஷமும் அழிந்து கொண்டிருக்கிறார்கள். நாம் எவ்வளவு காப்பாற்ற முடியுமோ அவ்வளவும் காப்பாற்றுவது நம் கையில் தான் இருக்கிறது.

**இப்பணியை செய்யும் முறை யாது?**

நம் திட்டங்களை வைத்து, இலக்கை நியமித்து அவைகளை அடைய முயற்சிக்க வேண்டும். அப்படி அடைந்த உடன் புதிய சில இலக்கையும் திட்டத்தையும் தீட்ட வேண்டும். நாம் அடையும் ஒவ்வொரு வெற்றியும் நம்மை இன்னும் சாதிக்கும்படியாக ஊக்கப்படுத்தும்.

இயேசு சொன்னார், '' இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று. உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்'' (யோவான் 4:35). மீண்டுமாக அவர் சொல்லுகையில், '' ...அறுப்புமிகுதி வேலையாட்களோ கொஞ்சம்;ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள்'' (லூக்.10:2). என் சகோதரரே, நாம் இப்பிரச்சினைக்கு தீர்வாக இருக்கபோகிறோமா அல்லது இப்பிரச்சினையில் ஒரு பகுதியாகவே இருக்கப் போகிறோமா? நாம் நம்முடைய கர்த்தரின் அழைப்பின் குரல் கேட்டு, வசனம் என்னும் விதையை விதைக்கும்படி புறப்பட்டு, தேவன் விளையச் செய்யும் போது அதை அறுத்து களஞ்சியம் சேர்க்கிறவர்களாக இருப்போமா? நாம் அப்படியே இருப்போம். இப்படி நாம் செய்தால் இந்தியாவிலும் உலகமெங்கிலும் சுவிசேஷத்தை நம்மால் நிச்சயம் கொண்டு செல்ல முடியும்.

**J.C.Choate** — J.C. சோட்

# நாவு

கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த சகோதரிகளே! நல்லவரின் வல்ல நாமத்தில் ஸ்தோத்திரங்கள். நாம் சென்ற மாத இதழில் நாவு பற்றியும், அதினால் ஏற்படும் தீமைகள் பற்றியும் பார்த்தோம். இந்த மாதம், தேவன் படைந்த அந்த நாவைக் கொண்டு என்னென்ன நன்மையான காரியங்களை நாம் அவருக்காகச் செய்ய முடியும் என்பதைப் பற்றி பார்ப்போம்.

''என் நாவு உமது நீதியையும், நாள் முழுவதும் உமது துதியையும் சொல்லிக் கொண்டிருக்கும்'' (சங்.35:28)

''நீதிமானுடைய வாய் ஞானத்தை உரைத்து, அவனுடைய நாவு நியாயத்தைப் பேசும்''

''அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது. அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை'' (சங்.37:30,31).

இங்கே, ஒரு மனிதன் தான் பேசுகிற வார்த்தையிலே பாவம் செய்துவிடுவோமோ என்று எச்சரிக்கையாயிருக்கிற ஒருவனைப் பற்றி பார்க்கிறோம். எந்த ஒரு காரியத்தை பேசுவதற்கு முன்பும் சிந்தித்து, ஜாக்கிர தையாகப் பேசுகிறான்.

''உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்; ஆதலால் என் நாவு உம்முடைய வசனத்தை விவரித்துச் சொல்லும்'' (சங்.119:172)

நீதியுள்ள கற்பனைகளை நாம் கொண்டிருக்கிறபடியால் அதைப்பற்றி நாம் பிறரிடம் பேசும்போது, அவர்கள் தங்களை தேவனோடு சரிசெய்து கொள்ளும்படியாய் நம்முடைய பேச்சு இருக்க வேண்டும்.

''அப்பொழுது நம்முடைய வாய் நகைப்பினாலும், நம்முடைய நாவு ஆனந்த சத்தத்தினாலும் நிறைந்திருந்தது. அப்பொழுது கர்த்தர் இவர்களுக்குப் பெரிய காரியங்களை செய்தார் என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்''. (சங்.126:2)

நாம் பிறரிடம் சாந்தமாகவும், அன்பாகவும் பேசும்போது அவர்களு டைய கோபத்தைக் கூட மாற்றமுடியும். நம்மில் அன்புகூருகிற ஒருவரிடம் கோபத்தைக் காட்டுவதுதென்பது மிகக்கடினமான ஒன்றாகும். கோபத்துடனும், பாதிப்புடனும் இருக்கும் ஒரு நபரிடம் நாம் மிகவும் ஞானமாக ஜாக்கிரதையுடன் வார்த்தைகளை விடவேண்டும்.சமாதானத்தை உண்டுபண்ணக்கூடியதும், மற்றவர்களை பிடித்து மேலே எழும்பச் செய்யவும், தக்கதாக பேசும்படியாக நல்ல வார்த்தைகளை கண்டுபிடித்துத் பேசவேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகவும் பெலவீனமாய் இருப்பவர்களுக்கு நம்பிக்கையையும், ஜீவனையும் கொடுக்கத்தக் கதாக நம்முடைய நாவை பயன்படுத்த வேண்டும். அதைவிடுத்து நாம் மதியற்றவர்களாய் நடந்தால் கோபத்திற்கு கோபத்தையே பதிலாகத் தந்து

விடுவோம். தேவனுடைய வார்த்தைகளைப் பற்றிய போதிய அறிவு இல்லாதவர்களும், அந்த வார்த்தைகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைப் பற்றியதான ஞானம் இல்லாதவர்கள்தான் மதியற்றவர்கள்.

நமக்கு நன்றாகத் தெரியும், தேவன் நல்லோரையும் தீயோரையும் கவனித்துக் கொண்டேயிருக்கிறார்.

"தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கி காக்கிறான்" (நீதி.21:23)

நீதிமொழிகள் 31ம் அதிகாரத்தில் உள்ள குணசாலியான ஸ்திரீயைப் போல நாம் வாழக் கற்றுக்கொள்ளவேண்டும். அவளுடைய வார்த்தையானது ஞானமும், தேவனுடைய சித்தத்தை புரிந்து கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. அவளுடைய வாயின் வார்த்தைகள் எப்போதும் அன்பும், சாந்தமும் அடங்கியதாக இருந்தது.

எபேசியர். 4:29-32 முடிய உள்ள வசனப் பகுதிகளைப் பார்க்கும்போது பொய்யான வார்த்தைகளும், தரமற்ற வார்த்தைகளும் நம் வாயிலிருந்து புறப்படக்கூடாதென்று வாசிக்கிறோம். பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரேயோஜனமுண்டாகும்படி பேசவேண்டும்.

நம்முடைய வார்த்தையைக் கேட்கிற பிறரை நாம் மதித்துப் பேசி பழகிக் கொள்ளவேண்டும். ஏனென்றால் இயேசு கிறிஸ்து தன்னையே அவர்களுக்காக கொடுத்து அவர்களை நேசிக்கிறார். தேவன் எந்தவகையாக நம்மை நேசித்தாரோ அதே வகையாக நாமும் பிறரை நேசிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார். நாம் பிறரிடம் பாசத்துடனும், பரிவுடனும் நடக்க பழகிக் கொள்ள வேண்டும். நாம் நம்முடைய பாவங்களை அறிக்கையிடும்போது தேவன் எவ்வளவு சீக்கிரமாக நம்முடைய பாவங்களை நமக்கு மன்னிக்கிறாரோ அவ்வளவு சீக்கிரமாக நாமும் பிறர் பாவங்களை மன்னித்து விடவேண்டும். பிரிவினைகளையும், விரோதத்தையும் சபைக்குள்ளாக கொண்டுவரக்கூடிய எந்தபாவத்தையும் நாம் விட்டுவிடவேண்டும்.

யாக்கோபு 3:13-18 வரை அடங்கியுள்ள வசனப் பகுதிகளில் நாம் சில பாடங்களை கற்றுக்கொள்ள முடியும்.

நாம் தேவனுடைய வார்த்தைகளை அறிந்து புரிந்து கொள்வோமானால் பிறகு நம்முடைய நடத்தை தாழ்மையுள்ளதாக இருக்கும். நாம் செய்யும் ஒவ்வொரு வேலையும் தேவனுக்கு மகிமையையும், கனத்தையும் கொண்டுவருமே தவிர நமக்கு அல்ல. நம்முடைய இருதயம் பொறாமையினாலும், சுய நலத்தினாலும் நிறைந்து இருக்கக் கூடாது. நாம் நம்மைப் பற்றியே பெரிதாக எண்ணி பெருமை பாராட்டாக் கூடாது. தேவனுடைய வார்த்தைக்கு எதிராக பொய் பேசக்கூடாது. பொறாமையும், சுயநலமும்

ஒருவரிடம் இருக்குமேயானால் அவர்கள் தீமையும் செய்யத் துணிந்து விடுவார்கள். இந்த வகையயான காரியங்கள் எல்லாம் தேவனுடைய வைகள் அல்ல. சாத்தனுடைய செயல்கள்.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! நாம் இங்கே பார்க்க வேண்டிய மிக முக்கியமான ஒன்று என்னவெனில், நாம் இங்கு பார்த்த ஏதாவது ஒரு சிறு காரியம் உங்கள் உள்ளத்தில் இருக்குமானால், உங்களை நீங்களே சோதித்து பார்த்துக் கொள்ளுங்கள். அதை இப்பொழுதே விட்டு விட முயற்சி செய்யுங்கள். உங்களை நீங்களே மதியற்றவர்களாக மாற்றிக் கொள்ளாதீர்கள். சிறிய பாவமும் தேவனுடைய பார்வையிலே பெரிதாகத்தான் தோன்றும்.

## பாவம், பாவம் தான்

நம்முடைய எண்ணம் கூட பரிசுத்தமுள்ளதாய் தான் இருக்கவேண்டும். சமாதானத்தையும், அன்பையும் கூட்டி வழங்குகிறவர்களாய் இருக்க வேண்டும். சபைக்காகவும், மற்ற காரியங்களுக்காகவும் நம் சொந்த ஆசை, விருப்பங்களை விட்டுக் கொடுக்கிறவர்களாக இருக்கவேண்டும்.

நாம் மற்றவர்களை முழுமையாய் மன்னிக்கிறவர்களாகவும், பொறுமை காட்டுகிறவர்களாகவும் இருக்கவேண்டும். தேவன் அங்கீகரிக்கிற பல நல்ல காரியங்களை தேவனும், பிதாவுமாயிருக்கிறவருக்கு செய்ய வேண்டும். நம்முடைய அன்பில் மற்றவர்களிடம் இவனைக் காட்டிலும் இவன் பரவாயில்லை என்று பாரபட்சம் காட்டக்கூடாது. உண்மையற்ற பொய்யான அன்பும் செலுத்தக்கூடாது. நம்முடைய இரட்சகராகிய இயேசுவைப் போலவும், பிதாவைப் போலும் இருக்க வேண்டுமானால் நாம் அன்புள்ளவர்களாக மாற வேண்டும்.

## யார் பரலோகத்திற்கு போவார்கள்?

"உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதார சத்தியத்தை பேசுகிறவன் தான்"(சங்,15:1)

நம்முடைய ஜெபத்துக்கு தேவன் செவி கொடுக்கவேண்டும் என்று நாம் எல்லோரும் எதிர்பார்க்கிறோம். ஆனால் அவருடைய பார்வையிலே நாம் தீமையான காரியங்களைச் செய்வோமானால் நம்முடைய ஜெபத்தை அவர் கேட்கமாட்டார். எனவே தீமையை பேசுவதற்கு நம்முடைய நாவை நாம் விலக்கிக் காத்துக் கொள்ளவேண்டும். தீமையிலிருந்து விலகி பரலோகப் பிதாவின் சித்தத்தின்படி செய்யவேண்டும். ஒருவரோடொருவர் சமாதானமாய் இருக்க வழிகண்டுபிடிக்க வேண்டும். ஏனென்றால் அப்போதுதான் பிதா மகிமைப்படுவார். (I.பேதுரு. 3:10-12)

நாம் பிறரிடம் பொறுமையாயும், தேற்றுகிறவர்களாயும் இருக்க வேண்டும் என விரும்புகிறார். ஏனென்றால் நாம் ஒருமனப்பட்டு, நம்முடைய

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப் படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே! இப்பொழுதும் நான் உங்கள் முன்பாக பொன்னான மூன்று கதவுகளை வைக்கிறேன். ஒருவரைப் பற்றி ஒருவர் சொன்ன கதைகளை நீங்கள் பிறரிடம் சொல்லுவதற்கு முன்பாக இந்த மூன்று குறுகிய பொற்கதவுகளுக்குள் சென்று பாருங்கள். அந்த குறுகிய கதவுகள் என்னென்ன? முதலாவது கதவு: இது உண்மைதானா? இரண்டாவது கதவு: இது தேவைதானா? உங்கள் மனதே இதற்கு பதில் கூறும். மூன்றாவது கதவு:மிக மிக குறுகினது. இவ்வாறு பேசுவது அன்பான செயலா?

இப்படி மூன்று கதவுகளுக்கு சென்று பார்த்துவிட்டு வந்தால் இறுதியாக உங்கள் வாயே சொல்லும், எதைப் பேசுவது அவசியம் என்று. பிறகு பயமில்லாமல் பேசலாம்.

இதை வாசிக்கும் அன்பு சகோதரிகளே! நம்முடைய முழுமனதோடும், முழு இருதயத்தோடும், தேவனண்டை கிட்டிச் சேர, வளர்வதற்கு முயற்சி எடுப்போம். நம்மைக காட்டிலும் தேவனையும் , மற்றவர்களையும் நேசிக்க கற்றுக்கொள்ரேவம். தேவனையும் கிறிஸ்துவையும் துதிப்பதற்காக நம்முடைய நாவை பயன்படுத்துவோம். பரலோகத்திற்கு போவதற்காக நம்முடைய நாவை பயன்படுத்திக்கொள்வோம். இவ்வாறாக நானும், நீங்களும் செய்ய பரலோகத்தின் தேவன் நமக்கு உதவி செய்ய ஜெபிப்போமாக! ஆமென்.

ரேச்சல் நாயகம் MARY DI PALMA


## வேதாகம பெயர்களும், அர்த்தங்களும்

| | | | |
|---|---|---|---|
| 1. | எருசலேம் | - | சமாதானம் (மத்.2:1) |
| 2. | பெத்தேல் | - | தேவனுடைய வீடு (ஆதி.28:19) |
| 3. | பெதஸ்தா | - | இரக்கத்தின் வீடு (யோவா.5:2) |
| 4. | பெத்லகேம் | - | அப்பத்தின் வீடு (மத்.2:1) |
| 5. | தெக்கப்போலி | - | 10பட்டணங்களின் கூட்டமைப்பு (மத்.4:25) |
| 6. | அக்கெல்தமா | - | இரத்த நிலம் (அப்.1:19) |
| 7. | கொல்கொதா | - | கபாலஸ்தலம் (மத்.27:33) |
| 8. | சீலோவாம் | - | அனுப்பப்பட்டவன் (லூக்.13:4) |
| 9. | பெத்தாவேன் | - | வீணான வீடு (ஓசியா.4:15) |

சிறுவர் பகுதி

# இன்ஜினியர் நோவா

சிறு பிள்ளைகளாகிய நாம் மழை வந்து ரோட்டில் தண்ணீர் புரண்டு ஓடினால் காகிதக் கப்பல் செய்து விளையாடி மகிழ்வோம். அப்படித்தானே. சென்ற மாதம் டாக்டர் லூக்காவிடமிருந்து பாடங்கள் கற்றுக் கொண்ட நாம், இம்மாதம், 40 நாள் பெருமழை வரும் என்று தேவனால் எச்சரிப்பு பெற்று, கொப்பேரு மரத்தால் கப்பல் ஒன்றை கட்டிய '' இன்ஜினியர்'' நோவா தாத்தா எப்படிப்பட்டவர் என்று பார்ப்போமா?



நோவா தாத்தாவின் காலத்திலே மனுஷர்கள் ரொம்பக் கொடுமையானவர்களாக, அக்கிரமத்தை அளவில்லாமல் செய்தார்களாம் (ஆதி.6:5) இப்படிப்பட்டவர்கள் மத்தியில் நோவா தாத்தா நீதிமானும் உத்தமனுமாயிருந்தான் என்று பைபிள் நமக்கு கூறுகிறது.அது மாத்திரமல்ல தம்பிகளே, தங்கைகளே! நாம் நமது நண்பர்களோடு பேசி பழகுவது போல் நோவா தேவனோடு பேசி மகிழ்ந்தார்.மனுஷர்கள் எல்லாம் தீமையை, கெட்டப் பழக்கத்தை செய்தபடியால் தேவன் மிகவும் கவலைப்பட்டார். (ஆதி.6:6) அப்பொழுது, தேவன், எல்லா சிருஷ்டிகளையும் அழிக்க வேண்டுமென எண்ணிக்கொண்டிருந்தார். ஆனால் அவருடைய கண்களில் நம்முடைய நோவா தாத்தாவிற்கு மட்டும் கிருபை கிடைத்தது. அது ஏன் தெரியுமா? தம்பி, தங்கைகளா, நோவா, நீதிமானும், உத்தமனுமாயிருந்ததால் தான் அப்படிக் கிடைத் தது, நாமும் அப்படி இருக்க வேண்டாமா? இருக்கனும் தானே.

தேவன், நோவாவை ஒரு பெரிய பேழையை (கப்பலை) கட்டும்படியாகச் சொன்னார்., அதை கொண்டு நோவா தாத்தாவையும், அவரது குடும்பத்தையும் பெரு மழையிலிருந்து காக்க தேவன் திட்டம் வைத்திருந்ததால் அப்படிச் சொன்னார். நோவா தாத்தா, கஷ்டப்பட்டு உழைத்து தேவ உதவியுடன் பேழையை கட்டிமுடித்த பிறகு, மிருகங்களும், சகல பறவைகளும் பேழைக்குள் சென்றன. (ஆதி.7:9) அந்த பேழை எவ்வளவுபெருசு தெரியுமா? 450 அடி நீளம், 75 அடி அகலம், 45 அடி உயரமாம் பிள்ளைகளே, அதில் 3

அடுக்குகளும் , நிறைய அறைகளும் இருந்தத மாம் (ஆதி.6:14-16). அந்த பேழை யில் சுமார் 1000 ரெயில் பெட்டிகளை வைக்கலமாம். அப்பாடி! எவ்வளவு பெரி தென்று பார்த்தீங்களா!!

பேழைக்குள் எல்லோரும் போன பின், சில நாட்கள் கழித்து தேவன் பூமயின் மேல் பெருவெள் ளத்தை வரப்பண்ணி னார். மழை 40 நாட்கள் இரவும் பகலும் ''சோ'' வென்று அடித்து கொண்டே இருந்தது. எங்கு பார்த்தாலும் வெள்ளம், ஆனால் பேழைக்குள்ளிலிருந்த நோவாவையும் அவன் குடும்பத்தையும் தேவன் அன்பாக பாதுகாத்தார். (ஆதி.7:4-24).



மழை பெய்து முடிந்து, தண்ணீர் வடிய தொடங்கியது, தாத்தாவின் கப்பல் அரராத் என்னும் மலையின் மேல் தங்கிற்று. சில நாட்கள் கழித்து பேழையில் இருந்த எல்லாம் மகிழ்ச்சியுடன் புதிய உலகிற்குள் இறங்கின. கெட்டவர்கள் எல்லாம் அழிந்து போனார்க்ள். நோவா தனக்கு நல்லது செய்த தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று எண்ணி, சுத்தமான மிருகங்களிலும், பறவைகளிலும் சிலவற்றை தகனபலியாக பலியிட்டான்.

நமது தேவன் இரக்கம் உள்ளவராக இருக்கிறதினால், இனி நான் தண்ணீரால் உலகத்தை அழிக்க மாட்டேன் என்று உடன்படிக்கை செய்தார். இன்றைக்கு மழை வந்தால், வானத்தின் நாம் பார்க்கிறோமே வானவில் அதை அந்த உடன்படிக்கைக்கு அடையாளமாக வைத்தார். தேவன் சொன்னபடி கப்பலை கட்டின இன் ஜீ னி ய ர் நோவாவிடம் என்ன பாடம் கற்றுக் கொள்கிறோம் என்று பார்ப்போம்.

1.நாம் நீதிமான்களும், உத்தமர்களு மாயிருக்கவேண்டும்.

2. தேவனுக்கு கீழ்ப்படிந்திருக்கவேண் டும்.

3. தேவனுக்கு நன்றி செலுத்துகிறவர் களாக இருக்க வேண்டும்.

வானத்தில்நாம் பார்க்கும் வானவில் நமக்குஎன்ன சொல்கிறது.

1. நாம் தேவனுக்கு உண்மையாக இருக்கவேண்டும்.

2. தேவன், தான் செய்த உடன்படிக் கையை காப்பாற்றுவார் என்று சொல் கிறது.

சரி, தம்பி,தங்கைகளே, நாம் இம்மாதம் கற்றுக்கொண்ட பாடங்களை கடைபிடித்து தேவனுக்கு பிரியமான பிள்ளைகளாக வாழ்வோம்.

சிறு பிள்ளைகளாகிய நம்மை பரலோகத்தின் தேவன் ஆசீர்வதிப் பாராக!

மனன வசனம் நீதி.20:7

**R. Abel Rodger Nagayam**

# "... எழுதினது எழுதினதே"

ஆதியிலே அநாதிதேவனால் வனையப்பட்ட ஆதாம் என்னும் ஆதிமனிதன், அகிலத்தையும், ஆகாயத்தையும் சிருஷ்டித்த, ஆதியும் அந்தமுமில்லாத தேவனோடு, குளிர்ச்சியான சாயங்கால வேளையிலே மகிழ்ச்சியாக சம்பாஷணை செய்தானென்று வாசிக்கையில், ஆதி மனிதன், தன் வாழ்க்கையின் பாதியில் மொழியைக் கண்டுப்பிடித்தான் என்ற கூற்று அபத்தமாக மாறிவிடுகிறது. ஆதி தேவனால் கொடுக்கப்பட்ட ஒலிவடிவ மொழிக்கு, எழுத்துவடிவம் கொடுத்தான் மனிதன் என்பதுண்மை. எழுத்து ஒவ்வொன் றையும் பல வடிவ உறுப்புகளை கொண்டு அமைத்தான், எழுத்தைப் படித்தான், வார்த்தைகளை உருவாக்கினான், இலக்கணம் வகுத்தான், வரையறுக்கப்பட்ட இலக்கணம் கொண்டு பண்பாடினான், பின் இலக்கியங்களை உருவாக்கினான், என்பதையெல்லாம் நாம் அறிந்தாலும் பல வகையான மொழிகளும் மனிதனால் கண்டுபிடிக்கப்படாமல் தேவனால் கொடுக்கப்பட்டது என்ற செய்தியையும் நாம் ஆதி ஆகமத்தின் பதின்ஒன்றாம் அதிகாரத்தில் இருந்து அறிவது சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆதியில் தேவனோடு மகிமையிலே உறவாடிக் கொண்டிருந்த வார்த்தையானவர் தேவலோகம் விடுத்து நரர் உலகில் அவதரித்தார். அப்பத்தின் வீடாகிய பெத்லகேம் என்னும் சிற்றூரில் விண்ணக அப்பமான இயேசு மண்ணகக் குழந்தையின் வடிவாய் மரியன்னை மடியில் தவழ்ந்தார். நமக்கு சமாதானம் உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் விழுந்ததால், நாம் பாவத்திற்கு போக்கினையாக சமாதானப் பிரபு சமாதானச் சீமையான எருசலேமில், தேசாதிபதியாக பிலாத்துவின் முன் ஜகத்திற்கெல்லாம் அதிபதியாக ஜீவ நாதர் இயேசு விசாரிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்படும்படி ஒப்புக்கொடுக்கப்பட்டார். அவரின் சிலுவையின் மேல் இவர் யூதருடைய ராஜா என்று எழுதப்பட்டிருந்தது. அதற்கு மூப்பர்களும், பிரதான ஆசாரியர்களும் ஆட்சேபம் தெரிவித்தபோது பிலாத்து விடமிருந்து வந்த உறுதியான பிரதியுத்தர வார்த்தைகள் இதுவே"... நான் எழுதினது எழுதினதே என்றான்" (யோவான் 19:22) இவ்வார்த்தையை வேறு கோணத்தில் பார்த்து சிலவற்றை அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இம்மாதம் இம்முயற்சி செய்கிறேன்.

## நாம் எழுதும் சுயசரிதை

கானகத்தில் குடிகொள்ளும் விலங்கினமாகப் பிறவாமல், மனித குலத்தில் பிறந்த ஒவ்வொருவரும், நம்மை உருவாக்கின உத்தம குயவனுக்கு

கண்க்கொப்புவிக்கும் கடமை உடையவர்களாக இருக்கிறோம். இக்கருத்தை வலியுறுத்தி அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதுகையில் "ஏனென்றால், அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (2.கொரி.5:10) என்கிறார். எனக்கன்பான வாலிபர்களே, சர்வலோகத்தையும் உள்ளடக்கும் "அவனவன்" , "நாமெல்லாரும்" என்கிற பதங்களை பக்குவமாக பாருங்கள். தனித்தனியாக, நாம் செய்யும் ஒவ்வொரு கிரியைக்கும் பலன் உண்டு என்றும் உலக படைப்பின் நாள் முதல், முடிப்பின் நாள் வரை வாழும் ஒருவர் கூட, அந்த நியாயத்தீர்ப்பின் நாளை தவறவிட முடியாது என்பதையும் நாம் அறிந்து கொண்டே ஆக வேண்டும்.

வாலிபர்களே, "நன்மைக்காவது, தீமைக்காவது" தக்க பலன் என்று நாம் இந்த வசனத்தில் வாசிக்கிறோம். அதாவது, தேவன் நமக்கு கொடுத்த இந்த வாழ்க்கையை நாம் எப்படி அமைத்துக் கொள்கிறோமே, அதை வைத்துத்தான் நமது மறுமை நியமிக்கப்படும் என்பது இதனால் தெளிவாகிறது. நமது ஆண்டவர் இப்புவியில் வசிக்கையில் லாசரு, ஐசுவரியவான் என்பவர்களைக் கொண்டு ஓர் உண்மையை விளக்க முற்பட்டார். இவர்கள் கிரியைகளால் எழுதின வாழ்க்கையின் சுயசரிதையை வைத்துச் சொல்லப்பட்ட உண்மை அது. இருவரும் இந்த பூமியில் வாழ்ந்தார்கள். லாசரு தரித்திரன், மற்றொருவன் ஐசுவரியவான். இவ்விருவரும் தங்கள் நாசியில் சுவாசிப்பதை நிறுத்தின பின் என்ன நடந்தது என்பதை நமதாண்டவர் கூறினார்.

ஒருவன், பரதீசுவில் உள்ள ஆறுதலின் ஸ்தலத்தில், ஆபிரகாமின் மடியில் தேற்றப்படுகிறான், மற்றொருவன் வேதனையுள்ள ஸ்தலத்தில் அவதிப்படுகிறான். ஐசுவரியவான், தேற்றப்படும்படியாக தன்னிலை மாற்றப் படும்படி விண்ணப்பிக்கையில், ஆபிரகாம் கூறுவதை தயவு கூர்ந்து கவனியுங்கள், "...மகனே, நீ பூமியில் உயிரோடிருக்குங் காலத்திலே உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அனுபவித்தான் அதை நினைத்துக் கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படு கிறான்,நீயோ வேதனைப்படுகிறாய் என்றார்" (லூக்கா .16:25). வாலிபர்களே, பூமியின் வாழ்வை வைத்துதான் மறுமை நிர்ணயம் செய்யப்படும் என்பதை புரிந்து கொண்டீர்களா! பூமியிலே தீமையை அனுபவித்தாலே போதும் பரலோகம் நிச்சயம் எனச் சொல்கிறேன் என்று எண்ணாதீர்கள். பின்பு என்னதான் சொல்கிறேன் தொடர்ந்து படியுங்கள்.

வேதனையான ஸ்தலத்திலுள்ள ஐசுவரியவான் தன் குடும்பத்தார் இங்குவரக்கூடாது என்ற எண்ணத்தில் லாசருவை பூமிக்கு அனுப்பும் என்று கேட்டபொழுது முற்பிதாவாகிய ஆபிரகாமின் பதிலை கவனியுங்கள். " .

அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கட்டும் என்றான்'' (லூக்கா.16:29)நாம் வேதனையுள்ள இடத்திற்கு போகாதிருக்க வேண்டுமென்றால் தேவனுடைய கற்பனையின் படி செய்ய வேண்டும் என்ற மறைமுக செய்தி இதில் புதைந்து கிடப்பதை அனுதரிசினி அல்லது பூதக்கண்ணாடி (Microscope) மூலமாய் பாருங்கள். அது மாத்திரமல்ல ஆபிரகாம் கூறும்போது, ''அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு'' என்கிறார். அது! எப்படி அவர்கள் எல்லாரும் இயேசுவின் காலத்தில் மரித்தல்லவா போய் விட்டார் என்கிற கேள்வி எழும்போது, நமக்கு கிடைக்கும் பதில் யாதெனில் எழுத்துவடிவில் அவர்கள் நம்முடனே இருக்கிறார்கள் என்பதுதான்.

வாலிபர்களே! நாம் இந்த பூமியில் வாழும்போது, நமது மறுமையை எங்கு கழிக்கப்போகிறோம் என்ற தீர்மானத்தை தெரிந்தோ, தெரியாமலோ எழுதுகிறோம். நாம் அதை நன்றாய் எழுத வேண்டும் என்பதற்காக தேவன் நமக்கு வழிகாட்டும்படி வேதாகமத்தை எழுதி கொடுத்திருக்கிறார். பெந்தெகொஸ்தே நாளில் இயேசுவை பகிரங்கமாக பிரசங்கித்த பேதுரு அப்போஸ்தலன் எழுதுகையில், ''ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும்'' (2.பேதுரு. 1:3) நமக்கு தேவன் தமது வசனத்தில் தந்து விட்டார் என்கிறார். அதே அப்போஸ்தலனிடம் ஒரு சமயம், ''நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களா? என்று இயேசு ஏக்கத்துடன் கேட்கையில், பேதுருவின் பதில், போக்கிடம் அற்ற எம் ஆக்கினையெல்லாம், நீக்கிப் போட சிலுவை மரம் தூக்கப்போகும் உம்மிடம் நித்திய ஜீவ வசனங்கள் உண்டே (யோவான்.6: 68)என்று சொன்னார் என்பதை நீங்கள் கவனியுங்கள்.

ஆம், பிரியமான வாலிபர்களே, நமக்கு நித்திய ஜீவனை அவர் ஒருவர் மாத்திரமே தரமுடியும், அவர் எழுதி கொடுத்த வேதத்தின்படி நாம் செய்யும்போது அப்படி நாம் அதை பெற முடியும். ஆதி திருச்சபை ஆரம்பமான காலமது,ஆணவம் கொண்டே ஆசாரியர்களும்,பெருமை கொண்ட பேரரசும் அக்குழந்தையை வளர விடக்கூடாது என்ற இழிகுணம் அதை நெருக்கின காலமது, அப்போஸ்தலர்கள், இயேசுவின் நாமத்தை வல்லமையை பிரசங்கித்ததால் சிறை தண்டனைக்கு சொந்தக்காரர்களானார்கள். அதையும் அவர்கள் மகிழ்வாகத்தான் நினைத்து, பாக்கியமென்று கருதினார்கள்.

கர்த்தருடைய சபை பலுகிப் பெருகினதால் பொறாமை கொண்ட பிரதான ஆசாரியனும், சதுசேயர்களும் அப்போஸ்தலர்களை சிறைச்சாலையிலே வைத்தார்கள். அவர்களை விடுவித்த கர்த்தருடைய தூதன் அவர்களிடம் சொல்லும்போது, ''நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவ வார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான்'' (அப்.5:20), ஏன் அப்படிச் சொன்னான், மறுமையின் ஜீவன் அந்த வார்த்தையில் இருக்கிறது என்கிற பேரு ண்மையை அவன் அறிந்து அப்படிச் சொன்னான். இயேசுவும் அவருடைய வார்த்தைகள், ''ஆவியாயும்

ஜீவனாயும்'' இருக்கிறது என்கிறார். (யோவான் 6:63) ஆகவே, பிரியமானவர்களே, அந்த வேத எழுத்துக்களை நமக்கு வழிகாட்டியாக வைத்து நாம் நம்முடைய வாழ்க்கை ஒழுங்கு படுத்தி எழுதுவது அவசியம்.

### ஆண்டவர் எழுதும் ஜீவ புத்தகம்

அப்போஸ்தலனாகிய பவுல் தன் இருதயத்தில் தரித்திருந்த பிலிப்பு சபையாருக்கு சிலரைக் குறித்து எழுதுகையில், "...அவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது''என்கிறார் (பிலி.4:3), நம்முடைய ஆண்டவர் ஆசியாவிலுள்ள ஏழு சபைகளில் ஒன்றான சர்தை சபைக் கெழுதுகையில், ''ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கபடும்; ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப் போடாமல்...'' (வெளி.3:5) என்கிறார். வாலிபர்களே கவனியுங்கள், நாம் என்ன செய்கிறோம் என்பதை வைத்து ஒரு புத்தகம் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறது அதில் நம்முடைய பெயர் இடம்பெற வேண்டுமென்றால் நாம் இவ்வுலகத்தை ஜெயங்கொள்ள வேண்டும். உலகத்தை ஜெயித்தவர் நம்மோடு இருந்தால் நம்மாலும் அதை செய்ய முடியும், நிச்சயம் முடியும்.

வாலிபர்களாகிய, நீங்கள் கிறிஸ்துவின் நாளில் பேருவகை அடைந்தவர்களாகத் திகழ உங்கள் முன் ஓர் அப்போஸ்தலனுடைய ஆலோச னையை வைக்கிறேன், ''நான் வீணாக ஓடினதும், வீணாகப் பிரயாசம் பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக் கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போல பிரகாசிக்கிற நீங்கள்... தேவனுடைய மாசற்ற பிள்ளை களுமாயிருக்கும்படிக்கு எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்'' (பிலி.2:14-16) என்கிறார். அவர் இருதயத்தில் தரித்திருந்த பிலிப்பு பட்டணத்தால் கிறிஸ்துவின் நாளில் ஆக்கினைக்கு தப்ப ஜீவ வசனத்தை பிடிக்க வேண்டியதாயிருந்தால், நாமும் அப்படியே செய்ய வேண்டும். நாம் இப்பொழுதே அதை செய்யவில்லை என்றால் நமது சரிதையின் முற்றுப்புள்ளியாகிய மரணத்திற்குப் பின் அவைகளை மாற்ற நினைத்தால், ''எழுதினது எழுதினதே'' என்று இயேசு கண்டிப்பாகச் சொல்லிவிடுவார். அப்படி நமக்கு ஒரு நிலை வராமல் இப்பொழுது நன்றாய் வாழ்க்கை சரிதையை தேவ நூலின் துணை கொண்டு மட்டுமே எழுதுவோம்! ஜீவ புத்தகத்தில் இடம் பெறுவோம்! தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக, ஆமென்!

**J.Pickens** ஜே. பிக்கின்ஸ்.

# மனிதன் தெரிந்தெடுக்கும் உரிமை

தேவன் தம்முடைய சாயலில் மனிதனை படைத்ததற்கு ஒரு நல்ல அடையாளம் நாம் தெரிந்தெடுக்கும் உரிமையோடு உருவாக்கப்பட்டிருக்கிறோம் என்பது. கடந்த கால சரித்திரத்தில் பலவிதமான மத சம்மந்தப்பட்ட காரியங்கள் மனிதன்மேல் கட்டாயமாய் திணிக்கப்பட்டதை நாம் அறிகிறோம். ஆனால் ஜீவனுள்ள தேவனானவர் மனிதனிடத்தில் அவ்வித கட்டாயத்தை விரும்பவில்லை. உபா.30:19,20ல் காண்கிறபடி, ஜீவனையும், மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் இஸ்ரவேலர் முன்வைத்து சரியானதை தெரிந்து கொள்ள வாய்ப்பளித்தார். இது தேவன் மனிதனுக்கு தரும் தெரிந்தெடுக்கும் உரிமையை நமக்கு காண்பிக்கிறது.

ஏன் ஒருவேளை, தேவன் ஜீவனையும் ஆசீர்வாதத்தையும் கட்டாயமாக மனிதன் மீது திணிக்கக் கூடாது? என்று சிலர் கேட்கலாம். ஆனால் நம் ஆண்டவர் இயேசு சொன்ன இளைய குமாரன் உவமையை சற்று சிந்தித்துப் பாருங்கள். இளைய குமாரன் கேட்ட பாகத்தை அச்சமயத்தில் மறுத்திருந்தால் ஒருவேளை அந்த தகப்பனுக்கு கெட்ட தகப்பன் என்று ஜனங்கள் பெயர் வைத்து இருக்கக் கூடும். இளைய குமாரன் தன் பாகத்தை கேட்டது அவனுக்கு அச்சமயத்தில் மிகச் சரியான செயலாகப் பட்டது. ஆனால் முடிவு வேறு. தகுதியான, வயதுள்ளவர்கள் ஓட்டளிக்கும் உரிமையை பெற்றுள்ளதுபோல நம்முடைய தேவன் மனிதனின் ஆவிக்குரிய வாழ்க்கையில் தெரிந்தெடுக்கும் உரிமையை அவனிடமே விட்டு விட்டார்.

ஆதி மனிதன் ஆதாமுக்குக்கூட தேவன் அந்த வாய்ப்பை அளித்தார். புசிக்க வேண்டாம் என்ற " தேவ கட்டளை"யும் புசிக்கலாம் என்ற "பிசாசின் ஆலோசனை"யும் அவனுக்கு முன்பாக வந்த போது தவறானதை தெரிந்து கொண்டான். அதே போல் தான், யாராகயிருந்தாலும் இன்றைய நாளில் தேவன் கிறிஸ்துவினால் மனந்திரும்பக் "கட்டளை" அப்.17:30 கொடுத்திருக்கும் போது சிலர், மனிதனுடைய யோசனையாகிய "மனிதன் குரங்கிலிருந்து வந்திருக்கக் கூடும்" என்பதை தெரிந்து கொண்டு, தேவன் இல்லை என்று மதிகேடராய் (சங்.14:1) சொல்லித் திரிகிறார்கள்.

கானான் தேசத்தில் இஸ்ரவேலர் குடியேறியபோது கூட யோசுவா.24:15 " நானும் என்வீட்டாரும் கர்த்தரையே சேவிப்போம்" என்று எச்சரித்தும், தேவன் மோசே மூலமாய் கொடுத்திருந்த என்னையன்றி வேற தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் என்ற கட்டளையையும் மறந்து புறஜாதிகளின் ஆலோசனையை ஏற்று இஸ்ரவேலர் விக்கிரகங்களை தெரிந்து

கொண்டார்கள். அதே போல, இன்றும் கூட சபையில் சேர்க்கப்பட்ட விசுவாசிகள் தங்கள் ஆரம்ப கால வைராக்கியம் கரைந்து, இஸ்ரவேலர் புறஜாதிகளைப் பார்த்துக் கெட்டுப்போனதைப் போல, நாமும் ஆரம்பத்தில் கொண்டிருந்த விசுவாச வைராக்கியத்தை விட்டு விலகாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அவர் வார்த்தைகளுக்கு கீழ்ப்படியும் போது மட்டுமே ஆசீர்வாதம் கிடைக்கும். வேத அறிவு மிகுந்திருப்பதால் மட்டுமே நாம் தேவனுக்கு உகந்தவர்களாக ஆக முடியாது. சவுல் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு வெற்றி கண்ட ராஜாவாக இருந்தாலும் அவன் தேவன் சொன்ன வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல் போனபோது ஆசீர்வாதம் இழந்தான். (1.சாமு.15:22)நமது ஜீவியத்தில் கூட சவுலைப் போல சில நேரத்தில் நமது நினைப்பால் சிறிய மீறுதல் தேவனுக்காகத்தான் என்றெல்லாம் சாக்கு சொல்லி தேவனுடைய ஆசீர்வாதத்தை இழப்பவர் அநேகர். தேவனுடைய வார்த்தையை மீறி நடக்கும்போது தண்டனை நிச்சயம்.

தேவனுடைய சமூகத்தில் காணப்பட விரும்பும் நாம் அனைவரும் அநேகர் செல்லும் கேட்டுக்கு போகும் வாசலில் போகாமல், ஒரு சிலர் மட்டுமே போகக்கூடிய கிறிஸ்துவின் இடுக்கமான வாசலில் பிரவேசிப்போம் மத்.7:13. தேவ ஆசீர்வாதத்தை தெரிந்து கொள்வோம்.

பாண்டியன்.

## நடப்புச்செய்திகள்

1. சுதந்திர இந்தியாவின் தீராத பிரச்சனையாக காவேரி பிரச்சனை உருவெடுத்துள்ளது.
2. காவேரி கண்காணிப்புக் குழுவின் அவசரக் கூட்டம் தோல்வி அடைந்தது.
3. த.மா.கா – காங் இணைந்ததின் பலனாக தமிழ்நாட்டில் 3 வது அணி வலுப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
4. சந்தன கடத்தல் வீரப்பன் மீண்டும் தன் கைவரிசையைக் காட்டி இருக்கிறான். கர்நாடக முன்னாள் அமைச்சர் கடத்தல்.
5. ஒருவருக்கு ஒரு பதவி என்ற தமிழக அரசின் சட்டம் செல்லாது என சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பு.

# லூக்கா ஒரு கண்ணோட்டம்

ஆசிரியர் : வைத்தியனாகிய லூக்கா
காலம் : சுமார் 55-62 கி.பி.

## இந்நூலைப் பற்றி...

1. லூக்கா ஒரு புறஜாதியான், புதிய ஏற்பாட்டை எழுதியவர்களில் இவர் ஒருவரே யூதன் அல்லாத புறஜாதியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கொலோ.4:10-17)
2. இவர் ஒரு மருத்துவர் (கொலோ.4;14)
3. இந்நூலின் திறவுகோல் வசனம் (19:10)
4. கிரேக்கர்கள், பூரண மனிதனையும், ஞானத்தையும் தேடியபடியால் இயேசுவை இவ்விரண்டையுமுடையவர் என்பதை வலியுறுத்து எழுதுகிறார்.
5. இயேசுவின் 15 ஜெபங்கள் சுவிசேஷ நூலில் எழுதப்பட்டிருக்கிறது அதில் 11 ஜெபங்களை இவர் மாத்திரம் எழுதுகிறார்; இந்நூலில் 20 அற்புதங்கள் இடம் பெறுகிறது.
6. "ஸ்திரீகள்" என்கிற வார்த்தை 43 முறை இந்நூலில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. மத்தேயு -மாற்கு ஆகிய இரு நூலையும் சேர்த்து 49 முறை இவ்வார்த்தை இடம்பெறுகிறது.
7. லூக்கா 23 உவமைகளை எழுதுகிறார். இதில் வேறே சுவிசேஷ எழுத்தாளர்கள் எழுதாத 18 உவமைகளை அடங்கியிருக்கிறது.
8. அ). புறஜாதிகள் - 2:32; 3: 6; 24:44
   ஆ). பெண்கள் - 7:11,12, 36-50;8:2,3,10;38-42
   இ). சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவர்கள் - 10:29-37 15:1,2 17:11-19 19:9-14

## இந்நூலின் செய்தி

1. மனித குலத்திற்காக தன்னை வெறுமையாக்கி "மனுஷகுமாரனை" நாம் கவனிக்கும் படி எழுதுகிறார்.
2. ஏழைகள், தவறாக நடத்தப்பட்டவர்கள் இயேசுவுக்கு இருந்து ஆழமான அனுதாபத்தை மிகவும் வலியுறுத்தி எழுதுகிறார்.

# "மனுஷர் மேல் விழுந்த கடமை"

இத்தலைப்பின் கீழ் தேவனுடைய வார்த்தைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ளுமுன் கடந்த ஜூன் மாதம் இதே தலைப்பின் கீழ் வெளியிடப்பட்ட கட்டுரையை உங்கள் நினைவிற்கு கொண்டுவரும்படி அன்போடு வேண்டுகிறேன்.

அநித்தியமான இந்த வாழ்க்கையில், மாயையும் மனதுக்கு சஞ்சலமுமான காரியங்களை நமது கடமையாக எண்ணி வீணாக வாழ்ந்து கொண்டிருப்பதை ஞானி சாலமோன் ஆழமாக ஆராய்ந்து, இவ்வாழ்க்கையில் மனுஷனுக்கு ஏற்பட்டுள்ள நாட்டமும் அதன் விளைவுகளையும் நாம் அறிந்து கொள்ளும்படி பன்னிரெண்டு அதிகாரங்களை கொண்ட பிரசங்கி என்ற புத்தகத்தில் வெளிப்படுத்தியிருப்பதோடு அவருடைய ஆராய்ச்சியின் முடிவில் "தேவனுக்கு பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள். எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே" (பிரசங்கி. 12:13)என்ற சத்தியத்தை வலியுறுத்தி காண்பித்துள்ளார். ஆம் தேவனுக்கு பயந்து அவர் கற்பனைகளைக் கை கொள்வதே மனுஷனுடைய தலையாய கடமை. இந்த வசனத்தில் இரண்டு முக்கியமான காரியங்களை நமது கடமையாக சாலமோன் ஞானி கருதுகிறான்.

1. தெய்வ பயம் 2. தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுதல்

## தெய்வ பயம்:

பயம் என்பது பொதுவாக எல்லா மனுஷரிடத்திலும் காணப்படும் ஒரு உணர்வு. பொதுவாக மனுஷன் தீமையான காரியங்களைச் செய்து விட்டு அதனால் தனக்கு நேரிடப்போகிற விளைவுகளை எண்ணி பயப்படுகி றவனாய் காணப்படுகிறான்.தேவனைக் குறித்து மனுஷனுக்கு காணப்படும் பயமும் இவ்வாறுதான் உள்ளது.தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தபின் தேவன் என்னை தண்டிப்பாரோ என்ற பயம். இது தெய்வ பயமல்ல. இப்படிப்பட்ட பயமுள்ளவனை தேவன் ஏற்றுக்கொள்வதில்லை.

முதல் சிருஷ்டிப்பான ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் இருந்தபோது ஒருநாள் பகலின் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி தோட்டத்தில் விருட்சங்களுக்குள்ளே ஒளிந்து கொண்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு; நீ எங்கே இருக்கிறாய்? என்றார். அதற்கு அவன்; நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு நான் நிர்வாணியாயிருப் பதினால் பயந்து ஒளிந்து கொண்டேன் என்றான். ஆதாம் தேவனுக்கு பயப்பட்டதின் காரணம் என்ன? அவன் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் அவருக்கு

விரோதமாய் பாவம் செய்தான். எனவே அவன் தேவனுக்குப் பயந்து ஒளிந்து கொண்டான். அப்பொழுது தேவன் அவனை விசாரித்தார். நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கிய விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார். அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்தீரியானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்கு கொடுத்தாள் நான் புசித்தேன் என்றான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள் சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான்புசித்தேன் என்றாள். இவர்களுடைய சாக்கு போக்குகளையும் தேவனுக்கு விரோதமாய் இவர்கள் செய்த பாவத்தினிமித்தம் இவர்களுக்குள் ஏற்பட்டிருந்த பயத்தையும் தேவன் ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம் அது தேவனைக் குறித்த பயமல்ல. அவர்கள் செய்த பாவத்தின் நிமித்தம் ஏற்பட்ட பயமே. எனவே தேவன் ஸ்திரீயை நோக்கி; நீ கர்ப்பவதியாயிருக்கும் போது உன் வேதனையை பெருகப் பண்ணுவேன்; வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன் ஆசை உன் புருஷனைப்பற்றியிருக்கும். அவன் உன்னை ஆண்டுகொள்வான். என்றும் ஆதாமை நோக்கி நீ உன் மனைவியின் வார்த்தைக்கு செவி கொடுத்து புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியால் பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும் நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடு அதின் பலனை புசிப்பாய் என்று கூறி கர்த்தர் அவனை ஏதோன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார். இவ்விதமான பயம் தேவனுக்கு பயப்படும் பயமல்ல. இப்படி தேவனுக்கு பயப்படுவது போல பாவனை செய்து கொள்பவர்கள் தண்டனைக்கு தப்பித்துக் கொள்ளப் போவதில்லை. அப்படியானால் தேவனுக்கு பயப்படும் பயம் எது? "தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்" என்று நீதி.8: 13ல் சாலமோன் ஞானி கூறுகிறான்.

யாக்கோபின் பிள்ளைகளில் செல்ல பிள்ளையாயிருந்த யோசேப்பு மந்தைகளை மேய்த்துக் கொண்டிருந்த தன் சகோதரர்களைச் சந்தித்து நலம் விசாரித்து வர சென்றான். அவனுடைய சகோதரர்களோ அவன்மீது இருந்த பொறாமையினால் அவனைக் கொலை செய்ய எத்தனித்து, பின்னர் எகிப்துக்கு பயணம் செய்துகொண்டிருந்த இஸ்மவேலரிடத்தில் அவனை விற்றுப் போட்டார்கள். போத்திபார் என்னும் எகிப்து தேசத்தான் அவனை இஸ்மவேலரிடத்தில் விலைக்கு வாங்கினான். யோசேப்பு செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப் பண்ணுகிறார் என்று அவன் எஜமான் கண்டு அவனை தனக்கு ஊழியக்காரனாகவும் தன் வீட்டு விசாரணை காரனுமாக்கி தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான். யோசேப்பு அழகான ரூபமும் சௌந்தரிய முகமும் உள்ளவனாயிருந்தான். சில நாள் சென்றபின் அவனுடைய எஜமானின் மனைவி யோசேப்பின் மேல் கண்போட்டு பாவமான காரியத்தை செய்ய அவனை கட்டாயப்படுத்தினாள்.அவனோ தன் எஜமானுடைய மனைவியின் சொல்லுக்கு உடன்படாமல் "தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி? ஆதி. 39:9 என்று கூறி தெய்வபயமுள்ளவனாய் தீமையை

வெறுத்து பாவத்தை விட்டு விலகி ஓடினான். அவனிடத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயம் காணப்பட்டது. அவனுடைய எஜமான், தன் மனைவி யோசேப்பின் மீது கூறின பொய்யான குற்றச் சாட்டை கேட்டு விசாரணை எதுவுமின்றி யோசேப்பை சிறையில் அடைத்தான். ஒருவேளை மனுஷர் முன்பாக யோசேப்பு குற்றவாளியாய்க் காணப்பட்டாலும் தேவனுடைய பார்வையில் தெய்வ பயமுள்ளவனாய் இருந்தபடியால் கர்த்தர் அவனோடு இருந்து அவன் மேல் கிருபை வைத்து எகிப்து தேசத்தில் அவனைப் போல விவேகமும் ஞானமுள்ளவன் ஒருவனுமில்லை என்று எகிப்தின் ராஜா பார்வோன் சொல்லும் அளவுக்கு யோசேப்பை உயர்த்தினார். பார்வோன் அவனை எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக ஆக்கினான்.

மனுஷன் அவனவன் தன்தன் சுய இச்சையினால் இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதனைக்குட்படும்போது இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தை பிறப்பிக்கும் என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு கூறுகிறார். யாக்.1:14,15 மாயையும் மனதுக்கு சஞ்சலமுமான சிற்றின்பங்களினால் மனிதன் தீமை செய்து தெய்வ பயமற்றவனாய் காணப்படுகிறான். வெளிப்படையாகவே தீமைகளை செய்ய துணிந்திருக்கும் மனிதகுலத்தின் மத்தியின் யோசேப்பு வித்தியாசப்பட் டவனாய் இருந்தான். அவன் இருந்த இடத்தில் அவனுக்கு அறிமுகமானவர்கள் எவருமில்லை. தீமை செய்ய அவனுக்கு எவ்விதமான தடையும் காணப்பட வில்லை. அப்படியிருந்தும் அவன் தீமை செய்ய துணியாமல் தீமையை வெறுக்கும் பயமுள்ளவனாய் இருந்தான். எனவே கர்த்தர் அவன் மேல் கிருபை வைத்தார். அந்த கிருபை அவனுக்கு பின் அவனுடைய சந்ததிகள் மேல் இருந்தது. ஆம்! கர்த்தருடைய கிருபை அவருக்கு பயந்தவர்கள் மேலும் அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றும் உள்ளது என்று தாவீது சங்.103:17ல் கூறுகிறான். நாமும் யோசேப்பை போல தீமையை வெறுத்து கர்த்தருக்குப் பயந்து ஜீவிப்பதை நம்முடைய கடமையாக எண்ணி தெய்வ பயமுள்ளவர்களாய் வாழ்வோமானால், தேவ கிருபை நம்மோடும் நம்முடைய பிள்ளைகளோடும் இருந்து நம்மையும் தேவன் உயர்த்துவார்.

**கற்பனைகளை கைக்கொள்ளுதல்:**

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வது மனுஷன் மேல் விழுந்த கடமை என்று சாலமோன் கூறுகிறான். கற்பனை என்றால் என்ன? வேத வசனமே கற்பனை என்று அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறான். 1.யோவான் 2: 7 வேத வசனம் தேவனுடைய வார்த்தை, எனவே தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடப்பதே கைக்கொள்ளுதல் என்று சாலொமோன் கூறுகிறான். செய்ய வேண்டியவைகளைச் செய்யாமலும் செய்ய வேண்டாதவைகளைச் செய்வதும் தேவனுக்கு விரோதமான பாவம். வேத வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது மனுஷனுக்கும் வேத வசனங்களுக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன? தேவன் மனுஷனோடு பேசும் வார்த்தைகளே வேத வசனம். தேவன் மனுஷனோடு பேசும்படி தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையே உள்ள உறவு என்ன? தேவன் மனுஷனை உண்டாக்கினவர்.

தேவன் மனுஷனை தம்முடைய சாயாலாக சிருஷ்டித்தார்.ஆதி.1:26,27 தேவன் மனுஷனை உண்டாக்கின நோக்கம் என்ன? தேவனுடைய மகிமைக்கென்று உண்டாக்கினார். ஏசா.43:7 ஆனால், மனுஷனோ பாவம் செய்து தேவ மகிமையற்றவனானான். ரோமர்.3:23 மனுஷனுடைய பாவமும் அக்கிரமங்களும் அவனுக்கும் தேவனுக்கும் இடையே பிரிவினை உண்டாக்கியுள்ளது. ஏசா.59:2 பாவத்தின் சம்பளம் மரணம் ரோமர் 6:23 தேவனோ தம்முடைய மகிமைக்கென்று உண்டாக்கப் பட்ட மனுஷனை இழந்து போக மனமில்லாமல் அவனை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொள்ள சித்தம் கொண்டார். தேவனுடைய மகிமைக்குரிய மனிதன் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக் கொள்ள தம்முடைய ஒரே பேறான குமாரனையே பலியாக ஒப்புக் கொடுத்து அவருடைய பரிசுத்தமான இரத்தத்தையே விலையாகக் கொடுத்தார்.

தேவ மகிமையை இழந்த நாம் மீண்டும் அவருடைய மகிமைக்குரியவர் களாய் வாழும்படி நம்மை சீஷராக்கி பிதா, குமாரன்,பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்து இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கட்டளையிட்ட யாவையும் நாம் கைக்கொள்ளும்படி நமக்கு உபதேசம் பண்ணுங்கள் என்றார் இயேசு. மத்.28:18-20. அவ்வாறே இயேசு நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார் என்ற நற்செய்தியை பேதுரு எருசலேம் நகரத்தில் முதன் முதலாக பிரசங்கித்த போது இருதயத்தில் குத்தப்பட்டவர்கள் தாங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமை என்ன என்று பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் வினாவினார்கள். அப்பொழுது பேதுரு நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் (அப்.2:38) என்றார். பேதுருவினால் அறிவிக்கப்பட்ட தேவனுடைய சித்தத்தை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் 3000 பேர் ஞானஸ்நானம் பெற்று தங்களுடைய கடமையை நிறைவேற்றினார்கள். அப்.2:41 அவர்களைக் கர்த்தர் தம்முடைய சபையிலே சேர்த்துக் கொண்டார். (அப்.2:47) அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நி யத்திலும், அப்பம் பிட்குதலிலும் ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்து மத்.28:20ல் சொல்லப்பட்டுள்ள இயேசுவின் கற்பனைகளை கைக்கொண்டு தங்கள் கடமையை நிறைவேற்றினார்கள்.

இரட்சிக்கப்படுகிறவர்களை கிறிஸ்துவின் சபையாகிய அவருடைய சரீரத்தோடு ஐக்கியமாயிருக்கும்படி தேவன் நம்மை அழைத்திருக்கிறார். I. கொரி.1:9 எனவே கிறிஸ்துவின் சபையில் முடிவு பரியந்தமும் ஐக்கியமாயிருப் பதே நமது கடமை. நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத் திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் என்றார் இயேசு. யோவான்.15:7 நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை நமக்கு எடுத்துரைத்துள்ள சாலமோன் ஞானி இவ்வாறு கூறுகிறான். '' நான் திரும்பிக் கொண்டு சூரியனுக்கு கீழே கண்டதாவது; ஓடுகிறதற்கு வேகமுள்ளவர்களின் வேகமும், யுத்தத்துக்குச் சவுரியவான்களின் சவுரியமும் போதாது; பிழைப்புக்கு ஞானமுள்ளவர்களின் ஞானமும் போதாது; ஐசுவரியம் அடைகிறதற்கு

புத்திமான்களின் புத்தியும் போதாது; தயவு அடைகிறதற்கு வித்துவான்களின் அறிவும் போதாது; அவர்களெல்லாருக்கும் சமயமும் தேவச் செயலும் நேரிட வேண்டும். (பிர.9:11) எனவே தேவனுடைய சித்தமில்லாமல் எதுவுமே நடக்காது என்பதை நாம் உணர வேண்டும். என்னத்தை உண்போம். என்னத்தைக் குடிப்போம் என்னத்தை உடுப்போம் என்றும் (மத்.6:31) எப்படி வாழுவோம் என்றும் கவலைப்படாமல், முதலாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் சபையையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். இதுவே நாம் நிறைவேற்ற வேண்டிய கடமை. இந்தக் கடமையை நாம் நிறைவேற்ற வேண்டும். கவலைப் பட்டு கலங்குகிற நம்முடைய உலக வாழ்க்கையின் கடமைகளை தேவன் தாமே அவருடைய கடமைகளாக ஏற்றுக்கொள்வதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். மத் 6:31-33 பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ. அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப் பாரோ? எண்.23:19 நிச்சயம் நிறைவேற்றுவார். எனவே நமக்கு நியமிக்கப்பட்டுள்ள தேவ மகிமைக்குரிய கடமைகளை நாம் நிறைவேற்று வோம். தேவன்தாமே நாம் நிறைவேற்றும்படி எண்ணியுள்ள கடமைகளை நமக்கு வாய்க்கப்பண்ணுவார். தேவ கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

ஹென்றி மோகன். ஊட்டி

## நடப்புச்செய்திகள்

1. பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவியாக இருக்கும் திருமதி. சோனியா காந்தி, அந்நியர் என்ற பிரச்சனையை செல்வி.ஜெயலலிதா மீண்டும் கிளப்பியுள்ளார்.
2. ''சிவப்பு +'' சின்னத்தை டாக்டர்களும், மருத்துவமனைகளும் பயன்படுத்த தமிழக அரசு தடை.
3. காஷ்மீர் தேர்தலை சீர்குலைக்க பாகிஸ்தான் தொடர்ந்து சதி. எல்லையிருந்து தீவிரவாதிகள் ஊடுருவல்.
4. குஜராத்தில் பா.ஜ.கா. வினால் தொடங்கப்பட்டுள்ள ''கௌரவ யாத்திரை''யை, ''அவமான யாத்திரை'' என்று காங்கிரஸ் கட்சி கருத்து தெரிவித்துள்ளது.
5. அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் தனது, தங்கை செரினாவிடம் மீண்டும் தோல்வியடைந்தார் வீனஸ் வில்லியம்ஸ்.
6. லண்டனில் நடைபெறும் 4வது டெஸ்ட்போட்டியில் இந்தியாவின் ராகுல் டிராவிட் இரட்டை சதம் அடித்தார்.
7. இம்மாதம் 11ம் தேதி அன்று நியூயார்க் இரட்டை கோபுரம் இடிக்கப் பட்டு ஒரு வருடம் நிறைவடைகிறது. உலகத் தலைவர்கள் நேரில் அஞ்சலி.

## சபையில் பெண்களுக்கென்று விசேஷமான பணிகளை தேவன் நியமித்திருக்கிறார்.

சபையிலும் சரி, வீட்டிலும் சரி, பெண்களுக்கான பணியைப் பற்றிய குழப்பம் இன்றைக்கு அதிகமாக காணப்படுகிறது. இப்படிப்பட்ட குழப்பம், நாம் வேதாகமம் என்ன சொல்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள மீண்டும் நல்ல வாய்ப்பை அமைத்துத் தருகிறது. சபையானது சத்தியத்திற்குத் தூணும், ஆதாரமாகவும் இருப்பதால் (I.தீமோ.3;15) பெண்களின் பங்கு பற்றி சபையானது வேதாகமச் சத்தியத்தை போதிப்பது அவசியமாகும்.

### இயேசுவின் ஊழியத்தில் பெண்களின் பங்கு

சபையில்,பெண்களின் பங்கு பற்றி நாம் ஆரம்பித்துப் படிப்பதற்கு, இயேசுவின் ஊழியமே சிறந்த இடமாகும். இயேசு, பூமியிலிருக்கும் போது சபையானது ஸ்தாபிக்கப்படவில்லை (மத்.16:18) அதற்கு மாறாக அது அவர் பரமேறி சென்றபின் ஸ்தாபிக்கப்பட்டது என்பதை நாம் அறிந்தே வைத்திருக்கிறோம். (மாற்கு 9:1; அப்.1:8; 2:1-4) ஆனாலும், இயேசுவின் ஊழியத்தின் ஆரம்பம் முதல், ஸ்திரீகளின் பங்கு என்ன என்பதைப் பார்ப்பதின் மூலம், சபையில் பெண்களின் பங்கு பற்றி நாம் அறிந்து கொள்ள முடியும்.

இயேசுவின் அப்போஸ்தலர்களின் ஒருவர் கூட பெண் இல்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம் (மத்.10:2-4) ஆனாலும், இயேசுவின் நெருக்கமான சீஷர்களில் சிலர், பெண்களாக இருந்திருக்கிறார்கள். லூக்கா.8:2,3 மகதலேனாள் எனப்பட்ட மரியாள், யோவான்னாள், சூசன்னாள், இன்னும் ''அநேக ஸ்திரீகள்'' அவருக்கு ஊழியம் செய்தார்கள் என்று கூறுகிறது. இயேசுவுக்கும், அப்போஸ்தலருக்கும், யோவான்னாளும், சூசன்னாளும் ஆஸ்திகளால் ஊழியம் செய்தார்கள். இயேசுவின் சிலுவை மரணத்தின்போது, அப்போஸ்தலர்கள் பயத்தினால் ஓடிவிட்ட போதிலும், சில உண்மையுள்ள ஸ்திரிகள் துக்கத்தோடு அவருடைய சிலுவை மரணத்தை காணும்படி அருகிலிருந்தார்கள் (மத்.27:55,56).

இந்த காரியங்களையும், இன்னும் சில விசேஷங்களையும் நாம் பார்க்கும்போது, இயேசு, ஸ்திரீகளை ஆண்களை விட கீழ்த்தரமானவர்கள் என்று ஒருபோதும் நினைக்கவில்லை. மாறாக, அவர் பெண்கள் சீஷர்களாகும்படி அனுமதித்தார். ஆனாலும் ஒருவரையும் அவர் அப்போஸ்தலராக தேர்வு செய்யாமல் இருந்ததின் மூலம், ஆண்களின் பங்கிற்கும், பெண்களின் பங்கிற்கும் சில வேறுபாட்டை அவர் காண்பித்திருக்கிறார். இப்படிச் செய்ததன் மூலம் இயேசு இரண்டு காரியங்களை நமக்கு போதிக்கிறார்.

1. கிறிஸ்துவின் பார்வையில் (இரட்சிப்பை, சீஷத்துவத்தை பொறுத்தவரை) பெண்ணும், ஆணும் சமமே.

2. ஆனால், இருவரும் செய்ய வேண்டிய பணிகள் வித்தியாசமானவை. இந்த காரியத்தை ஆதித் திருச்சபை போதித்தது. ஆகையால் நாமும் போதிக்க வேண்டும்.

## சபையில் பெண்களின் பணி

பெந்தெகொஸ்தே நாளில் சபை ஸ்தாபிக்கப்பட்ட போது, பெண்களும், ஆண்களும், அதிக எண்ணிக்கையில் அதற்குள் கர்த்தரால் சேர்க்கப்பட்டார்கள். (அப்.5:14) சபை அங்கத்தினர்களாகிற விஷயத்தில், பாலின வேறுபாடு பார்க்கப்படவில்லை. விதவைகளின் குறைவுகளை நிறைவு செய்வதில் ஆதித் திருச்சபைக்கு இருந்த அக்கறையை நாம் காணும்போது, அது பெண்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் தந்தது என்பதை நமக்கு காட்டுகிறது (அப்.6:1-6)

பெண்கள் செய்த நற்கிரியைகள், அடிக்கடி வேதத்தில் இடம் பெறுகிறது. தொற்காள், விசுவாசம் மிகுந்த, அன்பினால் பிறருக்கு சேவை செய்யக்கூடிய ஒரு பெண்ணாக விவரிக்கப்படுகிறாள் (அப்.9:36-39). லீதியாள், பவுலையும், மற்றவர்களையும், தங்கள் வீட்டில் தங்க வேண்டுமென்று " வருந்தி கேட்டுக் கொண்டாள்" என்று வாசிக்கும் போது அவளது உபசரிக்கும் குணம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (அப்.16:11-15) பெபேயாள் "கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரி" என்று வேதாகமம் கூறுகிறது (ரோமர்.16:1) பவுல் முழு நேரமாக கிறிஸ்தவப் பணி செய்து சபையில் உதவி பெற தகுதி பெற்ற பெண்களைக் குறித்து எழுதும் போது, சபைக்காக பெண்கள் செய்யக் கூடிய சிறந்த பங்குகள் இன்னும் அதிகமாக வெளிப்படும். 1.தீமோ.5:9,10 ஆகிய வசனங்கள், கீழ்காணும் தகுதிகளை பட்டியலிடுருகிறது, " அறுபது வயதுக்குக் குறையாதவளும், ஒரே புருஷனுக்கு மனைவியாயிருந்தவளுமாகி, பிள்ளைகளை வளர்த்து, அந்நியரை உபசரித்து, பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவி, உபத்திரப்படுகிறவர்களுக்கு உதவிசெய்து, சகலவித நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பித்து, இவ்விதமாய் நற்கிரியைகளைக் குறித்து நற்சாட்சி பெற்றவளுமாயிருந்தாள்; அப்படிப்பட்ட விதவையே விதவைகள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தனிப்பட்ட ஒரு நபருக்கு கர்த்தருடைய வார்த்தையை போதிப்பதில் பெண்களின் பங்கு பற்றியும் வேதாகமம் நமக்கு கூறுகிறது. அப்போஸ்தலர் 18:26, பிரிஸ்கில்லாள், தன்னுடைய கணவனாகிய ஆக்கிள்ளாவுடன், ஒரு நல்ல, ஆனால் முழுமையாக உபதேசிக்கப்படாத ஒரு பிரசங்கியாருக்கு "தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்திருக்கிறார்கள்" தீத்து 2:4 முதிர் வயதுள்ள ஸ்திரீகள் பாலிய ஸ்திரீகளுக்கு உபதேசிக்க வேண்டுமென எதிர்பார்க்கிறது.

.... தொடரும்..

## HEAR THE VOICE OF TRUTH
### ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45-9.00 p.m.<br>9.00 - 9.15p.m. | Box.3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun,Mon,<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m | Box.80<br>Kakinada-533001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 -7.00.p.m.<br>5.45 -6.00.p.m.<br>5.30-5.45 p.m. | Box.8405<br>Bangalore-560084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695034 | Sunny David |

*Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures*

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2002
Licensed to Post without Prepayment
TN / WR / ERD / 03 / WPP / 2002

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்
கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட,
அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள்
விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.
இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவசப் பயிற்சி,**

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண்–27, காங்கேயம் – 638 701.
தமிழ்நாடு. இந்தியா

Published by **Church of Christ, Kangayam,**
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S. Rajanayagam.**